Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

"கற்கை நன்றே
கற்கை நன்றே
பிச்சை புகினும்
கற்கை நன்றே."
— ஔவையார்

மில்க்வைற்சோப் மேலுறைகளை 10 வீதம் அனுப்பி ஔவையார் அருளிய அறிவு நூல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

மலர் 13 | ஆனி 16 | ஜூலை 16 | (30—6—71) | புதன்கிழமை | இதழ் 138

# ஊரடங்கு உத்தரவு ரத்து நாளை முதல் நீங்குகிறது!


## மேல் மாகாணத்தில் மட்டும் 5 மணிநேரம் ஊரடங்கும்

கொழும்பு, புதன்

நாளையிலிருந்து ஊரடங்குச்சட்டம் நாடுபூராவும் முற்றாக நீக்கப்படுகிறது. அரசாங்க தகவல் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது:

மேற்கு மாகாணத்தில் மட்டும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும். இங்கு இரவு 11 மணிமுதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும்.

ஏப்ரல்மாதம் 5-ம் திகதி நாட்டில் ஏற்பட்ட திடீர் பயங்கரவாத நடவடிக்கைகளைத்தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டது.



மகாலட்சுமியே வீற்றிருப்பதுபோல் காட்சியளிக்கும் இச்சிற்பத்தையும் இதுபோன்ற அழகிய சிற்பங்களையும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் கோவிலில் இப்போது காணலாம். பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ள பெருமான் கோயிலில் இன்று கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகின்றன. ஜூலை மாதம் 5-ந் திகதி காலை மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

### கடலில் தத்தளித்த

## இந்திய மீனவர் நெடுந்தீவில் ஒதுங்கினர்

நமது மாவிட்டபுரம் நிருபர்

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க வந்த ஐவர் படகு உடைந்து நாலு நாட்கள் கடலில் தத்தளித்து நெடுந்தீவுக் கடற்கரையில் ஒதுங்கினர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த வ. மரியசெய்து, எம். வி. ஹென்றி, வி. சுப்பிரமணி, எஸ். பிச்சை, எஸ். ஜோர்ச் ஆகியோர் கடலில் மீன்பிடிப்பதற்காக படகில் புறப்பட்டார்களாம். ஆனால் எதிர்பாராத படகு உடைந்ததால் கரைசேரமுடியாது தத்தளித்து தெய்வாதீனமாக நெடுந்தீவுக் கரையைவந்தடைந்தனர்.

இவர்கள் தமது கஷ்டத்தை நெடுந்தீவு கிராம சேவையாளரிடம் எடுத்துக் கூறியதையடுத்து அவர் இவர்களை பலாலி சட்டவிரோதக் குடியேற்ற தடுப்புப் பகுதியினரிடம் ஒப்படைத்தார்.

சட்டவிரோத குடியேற்ற தடுப்புப் பகுதியினர் இது பற்றி விசாரணை செய்து இவர்களைத் தாய் நாட்டுக்கு அனுப்பும் வேலைகளைச் செய்துவருகின்றனர்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்ட இவர்கள் தமது இன்னல்களையும் தாம் சாப்பாடு இல்லாது கஷ்டப்பட்டதையும் தெரிவித்தனர்.

ஓர் சோகமயமாகக் காட்சியளித்த இவர்கள் கடலில் நான்குநாட்களாக உணவின்றித் தத்தளித்தார்கள் என்று தெரிவித்தனர்.

WANTED

Wanted well recommended driver of 30 cwt. van Advt no. 3227, C/o Eelanadu Ltd, Jaffna. 3227

## மேற்கு வங்கத்தில் ராஷ்டிரபதி ஆட்சி

புதுடில்லி, ஜூன் 29

மேற்கு வங்காளத்தில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு மேற்கு வங்காளம் சம்பந்தப்பட்ட சகல பிரச்னைகளையும் சமாளிக்கும் பொறுப்பை கல்வி அமைச்சர் திரு. ராயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தகவலை பிரதமர் இந்திராகாந்தி அறிவித்தார்.

தற்போதுள்ள அமைச்சுப் பொறுப்புகளுடன் திரு. ராய்மேற்கு வங்க பிரச்னைகளையும் கவனிப்பார் என்று பிரதமர் கூறினார். மேற்கு வங்கத்தில் 3-வது தடவையாக ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## வடதுருவம் கடந்த முதல் பெண்

லண்டன், ஜூன் 29

பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த இளம்பெண்ணான செல்வி சிலர்காட் என்பவர் ஒரே ஒரு ஆசனமுள்ள விமானமொன்றில் வடதுருவத்தைக் கடந்துள்ளார். வடதுருவத்தைக் கடந்துள்ள முதலாவது நபர் என்ற பெருமையை இவர் தட்டிக் கொண்டுள்ளார்.

# பாகிஸ்தானில் மீண்டும் தேர்தல் நடக்கும்?

### யாக்யாகானின் வானொலிப் பேச்சு

புதுடில்லி, ஜூன். 29

பாகிஸ்தானில் மீண்டும் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தப்போவதாகவும், அரசவிரோதிகள் தேர்தலில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், அதிபர் யாக்யாகான் அறிவித்திருக்கிறார்.

நாட்டுமக்களுக்குவானொலி மூலம் விடுத்த செய்தி ஒன்றிலேயே இவ்வாறு கூறியிருக்கிறார். 55 நிமிட நேரம் வரை அவர் வானொலியில் பேசினார்.

பாகிஸ்தானுக்கான புதிய அரசியல் சாஸனத்தை உருவாக்குவதற்கு குழு ஒன்றை [illegible]

றேயல் பேணிஷேஸ்

திறப்புவிழா

இன்று (30-6-71) காலை 9 மணியளவில் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் எஸ். கனகரத்தினம் அவர்கள் திருவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார். மேற்படி வைபவத்தில் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

றேயல் பேணிஷேஸ்

சாவகச்சேரி

கண்டிறோட் — ஏகவிநியோகஸ்தர்கள்:- மொடேர்ண் பேணிச்சர்

79/2, கஸ்தூரியார்வீதி, (போன்: 7864) யாழ்ப்பாணம்.

### மரண அறிவித்தல்

திரு. செல்லப்பா

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த திரு. செல்லப்பா காலமாகிவிட்டார். இவர் பூரணத்தின் அன்புக்கணவரும், கந்தசாமி, செல்லச்சாமி, அரியபூபதி, குமாரசாமி, அரியமலர், கமலாம்பிகை, வாலாம்பிகை, விஜயராஜ் ஆகியோரின் அருமைத்தந்தையும், திரு லோறன்ஸ், திருமதி குணமணி, திருமதி கனகாம்பிகை ஆகியோரின் மாமனுமாவார். நல்லடக்கம் நாளை (30—6—71) மாலை 4 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெறும். தகவல்: செ. கந்தசாமி, நம். 1, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 2626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணம் செய்து 50 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இக்குதூகலமான தம்பதிகள் தம் தாம்பத்திய வாழ்க்கையில் மேலும் பல ஆண்டுகள் இன்புற்றிருப்பார்களாக.

யாழ்ப்பாணம் கோயில் வீதியைச்சேர்ந்த திரு. திருமதி ராஜரத்தினம் தம்பதிகள் இம்மாதம் 12-ம் திகதி தங்கள் திருமணத்தின் 50-வது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடுமுகமாக நல்லூர் கைலாச பிள்ளையார் கோவிலில் விசேஷ அபிஷேகம் ஒன்றை நடத்தினார்கள். இவர்களது உற்றார், உறவினர், நண்பர்கள் பலர் கலந்துகொண்டு தம்பதிகளை வாழ்த்தினர்.

திரு. ராசரத்தினம், 1910-ம் ஆண்டு அரசாங்க ஊழியராக குடிசன மதிப்பு இலாகாவில் சேர்ந்து 2 வருடத்தின் பின்னர் இந்திய இம்பீரியல் வங்கியிற் சேர்ந்து 1932-ம் ஆண்டுவரை இரண்டாவது சிறாப்பராகப் பணியாற்றினார். அதன் பின்னர் சொந்தமாக வியாபாரத்தில் ஈடுபட்டு தங்கொட்டுவ, பன்னலை ஆகிய இடங்களில் தும்பு, தெங்கு ஆலைகளை நிறுவினார். யுத்த காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சி. டபிள்யூ. ஈ. ஸ்ரோரில் பிரதம களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். 1965-ம் ஆண்டு யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை கூட்டுறவுச் சங்கத்தின் ஏஜண்டாக தென்னிந்தியாவில் நியமனம் பெற்று 1964-ம் ஆண்டுவரை கடமையாற்றினார்.

பலதுறைகளிலும் சுமார் 54 வருடங்கள் உற்சாகமாகக் கடமையாற்றி சகலரினதும் நல்லெண்ணத்தையும் பெற்றார்.

# பிள்ளையார் தான்.!

கடவுள் உண்மையில் இருக்கிறாரா? நமக்கு உதவி செய்கிறாரா? என்று நம்மில் பலருக்கும் அடிக்கடி சந்தேகம் எழுகிறது. ஓர் அன்பரை இதைப்பற்றி விசாரித்தேன். அவர் கொழும்பில் ஒரு பெரிய பதவி வகிப்பவர் வாலிப உற்சாகத்துடன் கவலையற்றவராக உள்ளவர்.

"உங்கள் மனமகிழ்ச்சியின் ரகசியமென்ன?" என்று கேட்டதற்கு, எதிரேயிருந்த பிள்ளையாரைத்தான் காட்டினார். எல்லாக் கவலைகளையும் அவரிடம் ஒப்புவித்து அவரையே நம்பி வாழ்வதுதான் இதற்குக் காரணமென்றார்.

பிள்ளையார் உங்களுக்கு எந்தவிதத்திலும் வாழ்க்கையில் உதவி செய்திருக்கிறாரா?' என்று கேட்டதும் இருவாரங்களுக்குமுன் தமக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைச் சொன்னார்.

'யாழ்ப்பாணத்திலே ஒரு கோயில் திருவிழாவுக்குப் போயாகவேண்டும். ஆனால் ஏதோ தகராறினால் போகவும் மனமில்லை. போகாவிட்டால் ஊரில் ஏதும் கதைப்பார்கள். காரியாலயத்தில் ஒருநாள் லீவு கிடைப்பதும் குதிரைக் கொம்பு. பிள்ளையார் விட்டவழி என்று பேசாமல் இருந்துவிட்டேன். புறப்படவேண்டிய நாட்களுக்கு முன், ஒருகண்ணில் ஏதோ சிவப்பாகப் பரவியது. ஆபிஸில் இதைப்பார்த்ததும், "இங்கு வரவேண்டாம், எங்களுக்கும் இது தொற்றிக்கொள்ளும். எவ்வளவு நாட்கள் லீவு வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு குணமானபின் வாரும்!" என்று சொல்லிவிட்டார்கள்.

எதிர்பாராதபடி 'லீவு' கிடைத்துவிட்டது. இதுவும் பிள்ளையாரின் அருள் என்று நினைத்து, விமானத்துக்கு டிக்கெட் கிடைக்குமா? என்று விசாரித்தேன். அதுவும் சுலபமாகக் கிடைத்தது. ரத்மலானை விமான நிலையத்துக்குப் போக டாக்ஸிக்காக தெருவுக்கு வந்தேன். ரத்மலானை செல்லும்பஸ் ஆள் ஒருவர்கூட இல்லாமல் வந்து தயாராக நின்று என்னை ஏற்றிச் சென்றது. காலையிலேயே விமான மூலம் யாழ்ப்பாணம் சேர்ந்து ஊருக்குச் சென்றேன். அங்கு வீட்டில் வைத்தியர் வந்து 'வெளியில் போகப்படாது. ஒய்வெடுத்துக் கொள்ளவேண்டும். இது ஒட்டுவா ரொட்டிநோய். மற்றவர்களுக்கும் இதுபரவிவிடும். மிகக் கவனமாக இருக்கவேண்டும்' என்று உத்தரவு போட்டுவிட்டார் யாரும் வந்து பார்த்துப் பேசப்படாதென்று சொல்லி வீட்டிலேயே ஏழு நாட்கள் அமைதியாக இருந்துவிட்டு, பின்னர் கொழும்புக்குத் திரும்பினேன். கண் சிவப்பும் நோயினால் வந்ததல்ல. அது தானாக மறைந்துவிட்டது! லீவுங்கிடைத்து ஊருக்குச் சென்று மனமில்லாத நிலையில் கோவிலுக்கும் போகாதபடியும், ஊரார் வந்து வீண்வம்பு பேசாமலும் தடுத்துப்பாதுகாத்தது என் முயற்சியா? அல்லது திட்டமா? பிள்ளையாரின் கையில் என் பொறுப்பை ஒப்புவித்துவிட்டு பேசாமல் இருந்தேன். அவ்வளவுதான் அவர் எல்லாம் செய்துவிட்டார். அவர் இருக்கையில் நாம் ஏன் கவலைப்படவேண்டும்?" என்று சொன்னார்.

"தெய்வத்திடம் நமது பிரச்னைகளையெல்லாம் அப்படியே ஒப்புவித்துவிட்டு நாம் கவலையற்று இருந்துவிட்டால் அவர் எல்லாம் பார்த்துக்கொள்வார். ஒரு கதை. ஸ்ரீ கிருஷ்ணரும் சத்தியபாமையும் சொக்கட்டான் விளையாடிக்கொண்டிருந்தார்களாம். பாதி விளையாடுகையில் கிருஷ்ணர் எழுந்து வெளியே செல்ல ஓர் அடியை எடுத்து வைத்தவர் பின்னர் திரும்பிவந்துவிட்டாராம். சத்திய பாமை பார்த்துவிட்டு, 'எங்கே எழுந்தீர்கள், ஏன் திரும்பினீர்கள்?' என்று கேட்டார்

'ஒரு பக்தன் என் பெயர் சொல்லி அழைத்தான். உதவுவதற்காக எழுந்தேன். ஆனால் பின்னர் அவனே தன்னைக் காத்துக்கொள்ள முற்பட்டான். அப்படியே பார்த்துக்கொள்ளட்டுமே என்று திரும்பிவிட்டேன்' என்றாராம் இறைவனையே பரிபூரணமாக நம்பி, அவரே கதி என்று சரணாகதி அடைந்தவர்களைத்தான் "என்னாலாவது ஒன்றுமில்லை தெய்வமே, எல்லாம் உன்செயல்' என்று அவர் கையில் தன்னை முழுதும் ஒப்புவித்து விட்டவர்களைத்தான் அவர் கைவிடாமல் காப்பாற்றுவார் என்றார் நண்பர்.

பகவத்கீதையிலும் 'அனன்யாச் சிந்தயந்தோ மே ஜனபர்யுபாஸதே, தேஷாம்நித்யாபியுக்தானம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்' (அதாவது வேறு யாரையுமின்றி என்னையே கதி என்று நம்பியவர் இருக்கிறார்களோ அவர்களது கடமைகள் பொறுப்புகள் எல்லாவற்றையும் அவர்களது அன்றாட யோக க்ஷேமங்களையும் நானே பார்த்துக்கொள்கிறேன்) என்று பகவான் உறுதி கூறியிருக்கிறார். பணம் தேவைப்பட்டாலும் கூட. அந்த அன்பர் பிள்ளையாரே என்று சொல்லி அவரிடம் முறையிட்டுவிட்டு பேசாமல் இருந்துவிடுவாராம். எங்கிருந்தாவது எதிர்பாராத முறையில் பணம் கிடைத்துவிடுமாம்!

0 0 0

கொழும்பிலே ஒரு பெரிய வியாபாரி. கோடீஸ்வரர். ஒரு கல்யாணத்தில் சந்தித்து அவருடைய வெற்றியின் ரகசியத்தைக் கேட்டேன். அவரும் கடவுளைத்தான் சொன்னார். ஒரு சமயம் இரண்டாயிரம் ரூபாய்க்காக கடையில் ஒருவர் வந்து உட்கார்ந்துவிட்டார். கையில் ஒன்றுமில்லை. 'செக்' மாற்ற ஆள் சென்றிருக்கிறான் வரட்டும்" என்று என்னையும் அறியாமல் சொல்லிவிட்டு, வேறொரு வியாபார அன்பரை பார்க்கச் சென்றேன். அவரும் கைவிரித்துவிடவே

(11-ம் பக்கம் பார்க்க)

## வண்ணக்கவிதை

## வடித்தெழுத வாராயோ?

வாங்கல் கவியரங்கில் பொன்னிலங்கை வானொலியில்
துங்கத் தலைவனெனத் தூயோய் அமர்ந்திருந்தே
பொங்கும் ரசிகர்குழாம் புகழ்ந்துரைத்துப் பூரிக்க
எங்கள் கவித்துவத்தை எடைபோட்டுப் பார்த்தனையே!

'சொல்லுக்குச் சொல்லழகு ஏறச் சுவைத்துரைக்க
வல்லோய்! 'மகாகவி'யே! வாழும் பெயருடையோய்!
மெல்ல வுணர்வெழுப்பி வீறுமிகும் மெய்க்கவிதை
நல்லோய்! நினைப்போல் நயந்தெழுத வல்லரார்யார்?

'கண்மணியாள் காதை'தனைக் கற்போர் நினைக்காண்பார்!
எண்ணியெண்ணிக் கண்ணீர் இரங்கிச் சொரிந்திடுவார்!
எண்ணத்தைச் சொல்லில் இழைத்துக் குழைத்துரைக்கும்
வண்ணக் கவிதை வடித்தெழுத வாராயோ?

வாயைத் திறந்திடிலோ வந்துவிழும் மணிக்கவிகள்
ஆயத் தொடங்கிடிலோ ஆரோ நினக்கிணைதான்?
தூய மரகவியே! சொல்லும் சுவைப்பொருளும்
தோயுஞ்சீர்க் காவியங்கள் தோய்ந்தெழுத வாராயோ?

ஆரார் நினையழைக்க ஆர்வத்தொடும் வந்தார்?
நாரா யணனாரோ? நன்முருக வேள்தானோ?
சீரார் மகாகவியே! செல்வத் தமிழ்கேட்க
ஆரார் விண்ணேருலகில் அருகிலமர்ந்துள்ளார்?

'தங்கக் கவித்தாத்தா' தனிப்புலவன் செல்லையா
பொங்குவிபு லானந்தப் புண்ணியனார் வேந்தனார்
எங்கள் குருகவிஞர் ஏறுமகா லிங்கசிவம்
மங்காக் கவிஞர்குழாம் சூழ மகிழ்ந்திருப்பாய்!

— வித்துவான் க. ஆறுமுகம்


# தீவுப்பகுதிகளில் பிரதிநிதிகள் தேவை

## கருத்தடைச் சாதனங்களின் சில்லறை விற்பனவு

1. கருத்தடைச் சாதனங்களுக்கான கிராக்கி கூடிக்கொண்டே வருகிறது. எனினும் தற்போதைய விநியோக, விற்பனவு முறைகளினால் மக்களின் தேவைகளை திருப்திகரமாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

## இலங்கை குடும்பத்திட்டச் சங்கம்

கீழ்க்காணும் கருத்தடைச் சாதனங்களை இறக்குமதி செய்து, நாடு பூராவுமுள்ள சில்லறை வியாபாரிகள் மூலம் நியாயமான விலைகளில் விற்கத் தீர்மானித்துள்ளது.

2. கருத்தடைச் சாதனங்களை விற்க விரும்பும் மருந்து, ரஸாயன விற்பனையாளர்கள் தனிப்பட்ட மருத்துவ நிலைய உரிமையாளர்கள், மற்றும் அங்கீகாரம் பெற்ற சில்லறை வியாபாரிகளிடமிருந்து விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன. விற்பனைக்குள்ள ரகங்களின் விபரம் வருமாறு:-

**பிரிவுகள்:**

(அ) வாய்மூலம் அருந்தும் கருத்தடை மருந்து: மாத்திரைகள் (வைத்திய பத்திரத்திற்கு மட்டும்) கூடிய, குறைந்த அளவுகளில் புரோஜெஸ்டஜன்ஸ், ஒஸ்டிரஜன்ஸ் கொண்டவை.

அ பிரிவு மருந்துகளை விற்பனவு செய்ய மருந்து விற்பனவு அனுமதிப் பத்திரம் தேவை.

(ஆ) கொண்டம் (ஆண் உறைகள்): டியூரெக்ஸ், மெட்ரோ, சுல்தான் ஆகிய ரகங்கள்.

(இ) நுரை மாத்திரைகள்

(ஈ) களிம்புகள்: "இமொலின்", "ஓர்தோகைனோல்". பூசும் உபகரணம் தனியாக.

ஆ, இ பிரிவு சாதனங்களை விற்பனவு செய்ய, மருந்து விற்பனவு அனுமதிப் பத்திரம் தேவையில்லை.

தயவு செய்து இன்றே உங்கள் விசாரணைகளை இவ்விலாசத்துக்கு அனுப்புங்கள்.

"தகவல்—சில்லறை விற்பனவு",
இல. கு. தி. சங்கம்.
23/5 ஹோர்டன் பிளேஸ்,
கொழும்பு-7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நான் தோற்றுவிட்டேன்

"தெணியான்"

மரணவீடு அமைதியாக இல்லை. ஒரே கலகலப்பு விட்டு விட்டுப் பறை முழங்குகிறது. அதிர்வெடிகள் காதுப்பறையை உடைக்கின்றன. வீட்டு வளவுக்குள்ளும் வெளியிலும் கூட்டங் கூட்டமாக மக்கள். பலர் வாயில் வெற்றிலை சமாதி அடைந்து சாறுபறிகின்றன சிலர் வாயில் சுருட்டுக்கள் பொருந்திப் புகைபோக்குகின்றன எவர் முகத்திலும் மரணத்தின் அமைதியில்லை ஒவ்வொரு கூட்டத்திலும் தத்தம் பிரச்னைகள். அரசியல் பொருளாதாரம். சமூகம், குடும்பம் இவற்றை அடக்கிய சர்ச்சைகள்; விதண்டாவாதங்கள் வெயில் வேறு கொளுத்திக் கரிக்கிறது.

நான் மெல்ல நடந்து சென்று, பழைய செருப்பைக் கழற்றிக்கொண்டு, குடையைச் சுருக்கி படிமீது வைத்து. மரநிழலில் அமருகிறேன். களைக்கிறது. நடந்த களைப்பு. வியர்த்துக் கொட்டுகிறது. சால்வைத் தலைப்பால் முகத்தையும் கழுத்தையும் துடைத்துக் கொள்ளுகிறேன். யாரோ ஒரு சிறுவன் என் முன்னுல் வெற்றிலைத் தட்டைக் கொண்டுவந்து வைக்கிறான் பலர் என்னைப் பார்த்து மெல்லச் சிரித்து மரியாதையாகத் தலையசைக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் என்னுடைய மாணவர்கள். அவர்கள் எல்லோருக்கும் என் பதிலைத் தெரிவிக்கிறேன். அந்தச் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த பல கிராமங்களையும் சேர்ந்த அவர்களைக் காணும்போது என் உள்ளம் பூரிக்கிறது.

இறந்த பெண்ணின் மகன் என்னைக் கண்டுகொள்கிருன். சோகம் தோய்ந்த அவனைக் காணும்போது நானும் வேதனையில் துடிக்கிறேன். அவன் என்னுடைய மாணவன் அவன்மேல் என்றுமே எனக்குத் தனியான வாஞ்சை மிக விவேகி, நல்லபிள்ளை அவனுடைய திறமைக்கு அவன் ஓர் ஆசிரியனாகமட்டும் வந்திருக்க வேண்டியவனல்ல, அதற்கு மேல் மிக உயர்ந்த ஒரு ஸ்தானத்தைப் பெறவேண்டியவன், அவன் குடும்ப நிலை அதற்கு வாய்ப்பாக இல்லை என்றாலும் அவனை அதற்குமேல் கொண்டுபோக முடியவில்லை

நான் ஆசிரியனாக இருந்த காலம் வேறு இந்தக்காலம் வேறு இன்று படித்துவிட்டு உத்தியோகம் இல்லாதிருப்பவர்கள், வேறு தொழில் கிடைக்காத காரணத்தால் ஆசிரியராகிறார்கள் இன்று ஆசிரியத் தொழில்தான் நடக்கிறது எங்கள் காலத்தில் ஆசிரியப்பணி செய்தோம். எங்களுக்கு அந்தக் காலத்தில் 'பிள்ளைபிடிகாரர்' என்று பெயர் பிள்ளைகளைத் தேடிக் கிராமம் கிராமமாக வீடுவீடாக அலைந்தோம். எங்கள் சரசரியைப் பெருக்கி, தொழிலை ஸ்திரப்படுத்திக்கொள்ளத் தான் என்று பலர் கருதினார்கள். ஆனால் என் மனநிலை அப்படி இருக்கவில்லை என் முன்னோரும் வாத்திமைத் தொழில் பார்த்தா வாழ்ந்தார்கள்! இந்தத் தொழில் இல்லாதபோனால் மண்ணைக்கிண்டப் புறப்பட்டிருப்பேன் அதற்கேற்ற உடல் வலிமையும் எனக்கிருந்தது

ஏதோ என் தந்தையின் நாட்டத்தால் கல்வி பெற்று என் மூன்றாவது கண்ணும் திறந்துகொண்டது கண்களை அகலத் திறந்து பார்த்தேன் எங்கும் இருள். மக்கள் எல்லாம் இருளில் அழுந்தி இடர்ப்பட்டுக்கொண்டிருந்தார்கள் அன்று செய்துகொண்டேன் திடசங்கற்பம்

பிள்ளைகளுக்குக் கல்வி ஒளியை ஊட்டவேண்டும் என்ற அறிவில்லாத பெற்றோர்களை அணுகுகிறேன் எனக்காகவேண்டி அவர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பப் பரிந்தழைத்தேன் இதனால் நான் இழந்த கைப்பொருள் ஏராளம். புத்தகங்கள், உடுபுடைவைகள் என் செலவில் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்தேன். இதனால் இன்றும் நான் கடன்காரன். ஆனால் எனக்கொரு தனியான ஆத்ம திருப்தி உண்டு. நான் ஏற்றி வைத்த சிறு தீபங்கள் பல இன்று இந்த நாட்டில் பல்வேறு இடங்களில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன.

இந்தத் தீபங்களில் ஒன்று தான் அவன். இறந்த பெண்ணின் மகன் துரைசிங்கம்.

அவன் நேராக என்னிடத்தி எழுந்து வருகிறான்

'வணக்கம் வாத்தியார்...'

கரம் கூப்பி வணங்குகிறான் கண்கள் துன்பத்தைச் சொரிகின்றன

என் நடுங்கும் கரங்களால் வாஞ்சையோடு அவன் முதுகைத் தடவிக்கொடுக்கிறேன் இலகுவில் என் வாயைத் திறக்க இயலவில்லை என் பிள்ளை கண்ணீர் சொரிகிறான் எப்படி என் வாய் பேசும்! இதயந்தான் பேசியது

சிரமத்தினூடே சில ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவனை அனுப்பிவைக்கிறேன் ஆசுவாசம் தீர வேகனை மூச்சை வெளிவிட்டுக்கொண்டு, என்னிடம் கற்ற அந்தக் கிராமத்துப் பையன்களைத் தேடுகிறேன்

எனக்கு அந்தக்கிராமத்தின் மேல் மிகவும் இறுக்கமான நாட்டம் இருந்தது அந்தப் பகுதியில் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்ந்த கிராமம் அது- அவர்கள் இப்படியே என்றும் இருந்துவிடக் கூடாதென்பது என் வேட்கை அவர்களால் அவர்களுக்குமட்டுமல்ல- இந்தச் சமூகத்துக்கே - ஏன் இந்த நாட்டுக்கே பெரு நஷ்டம். அவர்கள் மத்தியில் கற்றவர்கள் என்று சொல்ல மருந்துக்குக்கூடயானும் ஒருவர் இருக்கவில்லை. என்றுமே சண்டையும் சச்சரவுமாகச் சுகாதாரமற்ற வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்தார்கள். உழைப்பிலே குறைந்தவர்களல்ல நல்ல உடல் உழைப்பாளிகள். ஆனால் உழைப்பைச் சரியாகப்பயன்படுத்தத் தெரியாது குடித்துச் சீரழிந்தார்கள்.

அவர்களை இந்தத் துயரிலிருந்து மீட்கவேண்டுமென்பது என் அந்தரங்க ஆசை. அவர்கள் மத்தியில் சென்று பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றேன். தினமும் அதிகாலையில் வீடு வீடாகச்சென்று பிள்ளைகளைப் பாடசாலைக்குத் தயார் செய்து கூட்டிச்சென்றேன். அவர்களின் குறைநிறைகளைப் பெற்றவர்கள் மத்தியில் சென்று அறிந்து முடிந்தவரை தீர்த்துவைக்கப் பிரயாசைப்பட்டேன்.

அன்று எனக்கிருந்த எண்ணம், கல்வி அறிவூட்டினால் இந்தச் சமூகங்கள் திருந்திவிடுமென்பதுதான். அறியாமையினால்தான் மக்கள் திருந்தாமல் இருக்கிறார்களென்பதுதான்.

அந்தக்கிராமத்தில் துரைசிங்கமும் இன்னும் இரண்டு மூன்றுபேரும் இன்று அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் அயல்கிராமங்களில் திருமணம் செய்து குடியும் குடித்தனமுமாக வாழ்கிறார்கள்.

அந்தக்கிராமத்துப் பல பையன்கள் ஏழு எட்டாம் வகுப்புவரை படித்துவிட்டு தங்கள் குலத்தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் நான் இந்தக்கிராமத்துக்கு வந்திருக்கிறேன் ஒன்று இரண்டு ஓட்டு வீடுகளைத் தவிர பெரிதாக ஒரு மாற்றமும் இல்லை. பழைய [illegible] வெட்டுப்பேச்சுத்தான் ஒலி[illegible]

எனக்கு மரியாதை செலுத்துகிறார்கள்.

'வாத்தி... இரும் வாறன்'

பழைய அகங்காரம். அந்த நாட்களில் எங்கடை பிள்ளைகளாலேதானே இவர் சம்பளம் எடுக்கிறார்' என்ற அகம்பாவம். இன்று 'எங்கடை பிள்ளையளாலேதானே இவர் சம்பளமெடுத்து வாழ்ந்தவர்' என்ற அகம்பாவம் போலும்! பாவம்! நான் சம்பளம் பெறுவதற்காகத்தான் இவர்கள் பிள்ளையைப் பெறும் திருத்தொண்டைப்புரிந்தார்கள்போலும்! எனக்கு இவர்கள் புதியவர்களல்லர்! என்னிடம் கற்றவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்பதில்தான் ஆவலாக இருக்கிறேன்.

பேச்சுக்குரல் ஒன்று கேட்கிறது எனக்குப் பழகிய குரல்போலவும் தோன்றுகிறது செவியைக் கொடுக்கிறேன்.

'டேய்... மச்சான்... இதுக்கெல்லாம் கவலைப்படக்கூடாது. இன்லைடக்கி உன்ரை கோச்சி செத்துப்போனா; நாளைக்கு என்ரை ஆச்சி. பிறந்தால் இறக்கத்தானே வேணும் ஏன் இப்ப இதிலே நிற்கிறன், பின்னேரம் போற வழியிலெ விழுந்து சாகிறனே என்னவே! ஆர் கண்டது! நான் சாகிறதுக்கு எப்பவும் தயார் எனக்கிந்த உலகத்திலெ என்ன கிடக்கு. இந்தச் சின்ன வயதுக்கை அனுபவிக்கவேண்டியதெல்லாம் அனுபவிச்சுப்போட்டன் எனக்கென்ன மயிரே! உத்தியோகம் பாக்கிறவை தான் மயிர் நரைச்சாப்போல கலியாணம் முடிக்கிறவை. நான் நாலு பிள்ளையும் தேப்பனுமாய்விட்டன் இனிமேல் எனக்கென்ன... கிடக்கே! நான் ஒருவனுக்கும் பயப்பிடமாட்டன் எவன் என்னை நீ எண்டு சொல்லுறானோ அவன்ரை தரம் கீழே விழும். நாங்களென்ன உத்தியோகம் பாக்கிறமே... என்ரை வாயிலெ மண் விழுந்துபோகுமெண்டு பயப்பிட - எவனுக்கும் கை கட்டிநிக்க- பொலிசென்ன... ஒரு... என்னை மசுத்தேலாது'

எனக்கு ஆவல் மேலிடுகிறது. யார் இப்படிப்பேசுபவன் என்று நோக்குகிறேன் அவன் என்னிடம் படித்த முருகுப்பிள்ளை. தோல்வி! படுதோல்வி. என் வாழ்வில் நான்கொண்டிருந்த லட்சியம் அடிபட்டுக் குற்றுயிராகக்கிடந்து துடிதுடிக்கிறது:

இதற்குள் துரைசிங்கம் நான் இருப்பதைச் சாடையாகக் காட்டிவிடுகிறான். முருகுப்பிள்ளை என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டுத் தள்ளாடித் தளம்பிய வண்ணம் துரைசிங்கத்துக்கருகே இருந்து மௌனமாகச் சுருட்டைப் புகைக்கத்தொடங்கினான்.

அவன் மௌனம்- குருவுக்கு-எனக்குச் செலுத்தும் மரியாதையா?

ஆமாம், மரியாதைதான்.

இந்த நிலையிலும் அவன் எனக்கு மரியாதை செலுத்துகிறான். அப்படியானால் நான் தோற்றுவிட்டேனா!

ஆமாம், தோற்றுத்தான் விட்டேன்.

அவன் எனக்குச் செய்யும் மரியாதை மட்டுமல்ல, நான் பெறும் வெற்றி அதற்கு மேல் ஒன்றை எதிர்பார்த்தேன். அவனுடைய திருந்திய வாழ்வை - அந்தச் சமூகத்தின் திருந்திய வாழ்வை.

அந்த வெற்றிக்கம்பத்தை என்னால் ஏன் பெறமுடியவில்லை. நான் செய்த தவறென்ன! சிந்திக்கிறேன் ... சிந்திக்கிறேன்.

தவறு என்னிடத்தில்தான் இருக்கிறது. என்னுடைய தெளிவற்ற மயக்கமான எண்ணந்தான் என்தோல்விக்குக் காரணம்

வெறும்ஏட்டுக்கல்வியினால் மட்டும் ஒருவனையோ, ஒரு சமூகத்தையோ திருத்திவிட இயலாது. ஏட்டுக்கல்வி அவனுடைய சமூகச் சூழலில் அமிழ்ந்துபோகிறது. ஏட்டுக்கல்வியோடு தன்னைத் தான் உணருகின்ற சமூக உணர்வையும் ஊட்டவேண்டும். சுயசிந்தனைத் தெளிவைக்கோடிகாட்ட வேண்டும். தனக்கு மட்டுமல்ல சமூகத்துக்காகவும் வாழ வேண்டுமென்ற நாகரிகப் பண்பையும் புகட்டவேண்டும்.

தன்னை உணர்ந்து சமூகத்தையும் உணர்ந்து, தனக்காகவும் சமூகத்துக்காகவும் வாழ்கின்ற வாழ்வே வாழ்வென்பதைக் கல்வி அறிவு பள்ளியிலேயே தெளிவுபடுத்திவிடவேண்டும்; சமூகப் பிரச்னையோடு கலந்துவாழ்ந்து படப்படவேண்டும்.

இந்த உணர்வில்லாத உத்தியோக மனிதர்களுக்கும் முருகுப்பிள்ளைக்கும் எந்தவித வேற்றுமையுமில்லை.

இதனை இன்றுதான் நான் உணர்கிறேன் காலங் கடந்த யதார்த்த உணர்வு. இதனைச் சாதனைப்படுத்த இனிமேல் எனக்கு இயலாது. நான் இளைப்பாறிய ஆசிரியன்.

ஆனால் இன்றைய ஆசிரிய உலகமாவது இதனை உணரட்டும் உணரத் தவறினால் அவர்களும் என்னைப்போல் தோற்றுத்தான் போவார்கள்.

நான் என்பழைய செருப்பைக் காலில் கொளுவிக்கொண்டு வெயிலில் நடக்கிறேன். நீண்டதூரம் நடந்துவிட்டேன். என்குடையை விரிக்கவில்லையென்பது பின்னர்தான் ஞாபகத்துக்கு வருகிறது. ஆயினும் நடக்கிறேன்

(யாவும் கற்பனை)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

ரூபா 1000|- தொடக்கம்
ரூபா 5000|- வரை சேமிப்புக்கு
வருடம் 7 சத வீத வட்டி
கொடுக்கப்படும்
இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்.
தம்பி அன் கோ.,
284, காங்கேசன்துறைவீதி, வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## உழைப்பின் உயர்வு

எங்கே உழைப்பு இகழப்படுகிறதோ அங்கே அழிவும் சாவும் தேக்கமும் உண்டாகி கலைவளர்ச்சி கடினமாகிறது. எங்கே உழைப்பு விரும்பப்படுகிறதோ அங்கே வாழ்வும் ஒளியும் வளர்ந்து உழைப்பே இன்பச் சுமையாக மாறுகிறது. ஏழை உழைப்பாளிக்கு அன்பு காட்டு. அவனுடைய ஆன்மாவுக்கு உணவைக் கொடு. அன்பினால் தூண்டப்பட்ட உழைப்பு இன்புடன் நடக்கும். — ராமதீர்த்தர்

## ஆணிவேர்

மலேசிய குடாநாட்டுக்கும் சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளுக்குமிடையில் இருக்கும் கடற்பாங்கு மலாக்கா ஜலசந்தி என்றழைக்கப்படும். சுமார் 600 மைல் நீளமும், ஆகக்குறைந்தது 60 மைல் அகலமும் கொண்ட இந்த ஒடுக்கமான பாதையே பசுபிக் சமுத்திரத்திலிருந்து இந்துசமுத்திரத்திற்கு வருவதற்கு மிகக் கிட்டிய சுலபமானவழி. ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் ஆசிய நாடுகளுடன் இடைஞ்சலின்றி வர்த்தகம் செய்வதற்கு இப்பாதை சூயஸ்கால்வாய், ஜிப்ரோல்டர் ஜலசந்தி முதலியவற்றைக்காட்டிலும் முக்கியமானது. சிங்கப்பூர் துறைமுகம் இந்த ஜலசந்தியை காவல்புரிகிறது. இங்கே வருடத்தில் சுமார் 12,000 கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி தங்குகின்றன. ஒவ்வொருநாளும் சுமார் 200 கப்பல்கள் ஒன்றையொன்று அநேகமாக முட்டியவண்ணம் இப்பாதையால் செல்லுகின்றன. மேற்கேயிருந்து பலகோடி பெறுமதியான பொருட்களுடன் ஜப்பான், சீனா, தாய்வான், பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, போர்னியோ முதலிய இடங்களுக்கு செல்லும் கப்பல்களும், இவ்விடங்களிலிருந்து மேற்கே வரும் கப்பல்களும் இப்பாதையையே உபயோகிக்கின்றன. கேந்திர ஸ்தானமாக விளங்கும் மலாக்கா ஜலசந்தியின்மீது ஆதிக்கம் புரிபவர்கள் உலக வர்த்தகத்தையே ஆட்டிவைக்க முடியும். வியட்நாம் சண்டைக்கு ஆணிவேர் இதுதான்.

## தூசு வெறும் தூசல்ல

காற்று தூசை அள்ளி உடம்பில் கொட்டும்போது மூச்சுத்திணறி சீயென்று அதை வெறுக்கிறோம் ஆனால் உலகில் ஜீவராசிகள் உயிர்வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாததொரு பொருள் இந்த தூசு. அதில்லாவிட்டால் மழை பெய்யாது. மழை இல்லாவிட்டால் உயிர்வாழமுடியாது. கடல், குளம் முதலியவற்றிலிருந்து நீர் ஆவியாகமாறி மேலே முகிலாக உலவுகிறது. அதேசமயம் தரையிலிருந்து எழும் புழுதியும் ஆகாயத்தில் நிறைந்திருக்கிறது. பவனத்தில் மிதந்து கொண்டிருக்கும் புழுதியை சிலசமயம் சூரிய ஒளியில் பார்க்கலாம் கண்ணுக்குப் புலப்படாமலும் காற்றில் புழுதி இருக்கிறது. நீராவி நீர்த்துளியாவதற்கு ஒரு பற்றுக்கோடு வேண்டும். ஒரு புழுதிக்கணுவைச் சுற்றி மழைத்துளி உண்டாகிறது. ஆகவே புழுதியே மழைக்கு ஏதுவாகிறது' இன்னொருவகையில் பவனத்திலுள்ள தூசு மனிதருக்கு உதவுகிறது. சூரியனுடைய வெப்பம் முழுவதும் பூமிக்கு வந்து சேர்ந்துவிட்டால் உயிரினங்கள் அந்த உஷ்ணத்தைத் தாங்கமுடியாது. காற்றில் நிறைந்துள்ள தூசு சூரிய கதிர்களுக்கும் எமக்குமிடையே ஒரு திரைபோல இருந்து சூரியவெப்பத்தைத் தணித்துவிடுகிறது.

## அராபிய இரவுகள்

1672-ல் மொரக்கோ தேசத்தையாண்ட மௌலே இஸ்மெயில் என்ற சுல்தானுக்கு 549 மனைவியர் இருந்தார்கள். இதுபோக அந்தப்புரத்து காதற்கிழத்திகள் வேறு ஆயிரக்கணக்கில் இருந்தார்கள். மூன்று மைல் நீளமான அவருடைய குதிரை லாயத்தில் 12,000 குதிரைகள் இருந்தன. அரண்மனை சேவகம் புரிவதற்கு சுல்தானிடம் லட்சக்கணக்கான அடிமைகள் இருந்தார்கள். இவர்களில் 25,000 பேர் கைது செய்யப்பட்ட கிறிஸ்தவர்கள். இந்த சுல்தான் பிரெஞ்சு மன்னன் 14-வது லூயியின் மகள் ஒருத்தியை மணம் செய்ய விரும்பினான் இதைக் கேள்வியுற்ற லூயி சுல்தானைப்பற்றி அறிந்துவர ஒரு தூதுவனை அனுப்பினான். சுல்தானின் அரண்மனையில் தான் தங்கியிருக்க ஆறுவார காலத்துக்குள் அவருக்கு மூப்பத்தொரு குழந்தைகள் பிறந்தன என்று அந்த தூதன் செய்தி அனுப்பினான். சுல்தான் இறந்தபோது அவருக்கு 867 புத்திரசந்தானம் மிஞ்சியது!

## ஆண் பெண் மாருட்டம்

பெண்கள் ஆண்களைப்போல காற்சட்டை போடவும், தலைமுடியை வளர்க்காமல் சிலுப்பா வைக்கவும் பழகிக்கொண்டார்கள். இத்துடன் சிலருக்கு இயற்கையாகவே வளர்ச்சியடையவேண்டிய உறுப்புகள் வளர்ச்சி குறைந்துவிட்டால் ஆண்பெண் மாருட்டம் ஏற்பட்டுவிடுகிறது. ஒருநாள் ஒருபெரியவர் பஸ்நிலையத்தில் 'கியூ' வரிசையில் நின்றார். அவருக்கு பெண்களின் நவீன நாகரீக உடைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாது. தமக்குப் பின்னால்நின்ற ஒரு நபரைத் திரும்பிப்பார்த்து. 'எனக்கு முன்னால் நிற்கும் உருவத்தைக் கவனித்தீர்களா? சிலுப்பா வெட்டும் நீண்ட காற்சட்டையுமாக, இது என்ன ஆணா பெண்ணா?' என்று பகிடிபண்ணினார். பின்னால் நின்ற உருவம் அவரை முறைத்துப் பார்த்துவிட்டு, "கவலைப்படாதேயும் பெரியவர், அது ஒரு பெண்தான் என்னுடைய மகள்' என்று கூறியது. பெரியவர் திடுக்கிட்டு 'ஐயா, என்னை மன்னிக்கவேண்டும். நீங்கள்தான் அந்தப்பெண்ணின் தந்தை என்று தெரிந்திருந்தால் நான் அப்படிச் சொல்லியிருக்கமாட்டேன்' என்றார். பின்னால் நின்ற அந்த காற்சட்டை தரித்த உருவத்துக்கு மேலும் கோபம் வந்துவிட்டது. 'நான் அவளுடைய தந்தையல்லக்காணும், தாய்' என்றது. பெரியவர் வெட்கி கூனி மறுபக்கம் திரும்பிக்கொண்டார்.

தயாரிப்பு — வழிப்போக்கன்.

நமது பழங்குடிகள் — 2

# வேட்டுவர் மொழியும் அவர்தம் வழிபாடுகளும்

ஏழ்நதக் கருத்தினையும் அறிவிக்குமாற்றல் வேடர் மொழிக்கு உண்டு என கடந்தமாதம் 9-ந் திகதி வெளியான கட்டுரையில் கூறியிருந்தேன்.

வேடுவமொழி தமிழோடும் சிங்களத்தோடும் தொடர்புள்ளதோர் இனிய பாஷையாகும் பேச்சுவழக்கில் மட்டும் உள்ள இம்மொழி பூரணத்துவமற்ற தொன்றெனினும் ஆங்கிலம், சிங்களமாகிய மொழிகளை விரைவில் கற்றுக்கொள்ள இது உதவியாகவிருக்குமென மொழி ஆய்வாளர் சிலர் கருதுகிறார்கள். அப்படியானால் நாட்டின் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இம்முறை ஒரு சிறந்த கருவியாகுமெனலாம். இம்மொழி பற்றிய ஆராய்ச்சி பல்கலைக் கழகத்தாருக்கே பொருத்தமாகும்.

வேடுவமொழிச்சொற்கள் சிலவற்றை இனி ஆராய்வோம் அவர்களின் பெயர்கள் இயற்பொருள் சேர்ந்தவை பொரமலா என்பது ஓர் ஆண்பாற்பெயர் பொரமலீ அதன் பெண்பாற்பெயர். பொரஎன்னும் செடியின் பூவை இப்பெயர்கள் குறித்துநிற்கும். கொஹொம்பா, கொஹொம்பீ என்பன வேம்பையும், ஹந்துன, ஹந்துனீ என்பன சந்தனத்தையும் குறிப்பனவாகும். விலங்கின் பெயர்கள்: பொட்டகந்தா-பெருஞ்சரீரி, வானை; ஹொட்டபரியா-பெருமூஞ்சு, பன்றி; கருமஞ்ஞா-கருமயிர், கரடி. புல்லெச்சா-புலி; சப்பி- இது பக்ஷி என்பதன் விகாரம்: தெய்வியலெத்தொ மங்கச்சன சப்பி- முருகன் இவர்ந்து செல்கின்ற புள்.

இனி தாவரங்கள் பற்றிப் பார்ப்போம் கிரிகெஜ்ஜ பாற்காய், சோளம்; கடுகெஜ்ஜ -முள்ளாங்காய், பலா, கஜ்கெஜ்ஜ- துவர்க்காய், பாக்கு; பெங்கிரி-வெற்றிலை, வேசாகொள-நச்சிலை, புகையிலை; பொருட்பெயர்கள்: தெபங்டுல்லம்-தண்டுலம், அரிசி; கல்ரெக்க-பண்டு கல்லினால் செய்த கருவி, கோடரி; புச்சக்கடன யமகெ-சுடுகின்ற இயமன் போன்ற கருவி, துப்பாக்கி; இனகோணம், ஈங்க கோணம், இஹகோணம்- தியகோணம் முறையே இடைகட்டும் சீலை, சட்டை, தலைச்சீலை கச்சு. ரிதிபோரு- வெள்ளிக்காசு, தம்ப போரு-செப்புக்காசு. ரிதிபோரு தம்பபோரு என்றால், காசு பணம் என்பது பொருளாகும். தியநீர்; இர-சூரியன்; ஹந்த-சந்திரன்; மொப-இங்கு; ஒப-அங்கு; மேஎக்கொ-நான்; தொபனி-நீ; மினிகெஜ்ஜா-ஆண்; நேனி கொத்தா-பெண்; கெகுலா-சிறுவன்; கெகுலி-சிறுமி; லாகெகுலா (பச்ச முகை)- குழந்தை; ஹாரா-ஐயா, மகாஹாரா- பெரியவர்.

வினைச்சொல், வினையெச்சம் ஆகியன:

இமெயி- உள்ளது; கொஹொமி- இல்லை; ஹொந்தமயி ஹொந்தயி-ஆமாம்; மங்கச்சச-செல்; மந்தாறவர-அமைத்தல், சமைத்தல், கொல்லுதல், வெட்டுதல், செய்தல், அரைத்தல் ஆகிய பலபொருள். கெலிலவர-உண்கிறது, குடிக்கிறது. ஊர்ச்சைகவரா கொக்கிறது; பச்சடவர- சுடு; கருகுருகால்வா-எழுது

கிறது, அரைக்கிறது; கதைவரா-பேசுகிறது.

சொற்றொடரின் உதாரணமாக நம் கேள்விப்பட்ட (1949) திஸாஹாமி எனும் வேடுவ தலைவரின் பேச்சினின்று ஒருபகுதியை இங்கு தருகிறேன். மஹாஹாரா- பெரியவர், (மதிப்புக்குரிய டி எஸ். சேனநாயகா) மங்கச்சலவந்து. பொல்லெச்சவகெ- ஒரு புலியைப் போல, கட்டபொஜ்ஜபட்ட எறலா-வாயைத் திறந்துவிட்டு, கதாகெம்மா-கதை போட்டார். மேஎத்தண்ட- எமக்கு. மயியங்கனை போறுகமட்ட மங்கச்சன்ன- மஹியங்கன நகரத்திற்குச் செல்ல ஒரு வழி. கெனை பொஜ்ஜபட்ட கஹால-காட்டைத் தப்பரவாக்கி. எனஹாகாலவைகதா தெம்மா-தருவேன் என்று கதை போட்டார்.

இந்த வேடுவரின் உடுவங்கள் இந்தியபாலைவனங்களில் இருந்த வேடுவர் போன்றதெனினும் அவர் போலக்

கோலும் குரலையுடையவன். அவன் எதிர்ப்பட்டான்.

உடும்பு எம்நாட்டு வேட்டுவருக்கும் வாய்நீர் ஊறச் செய்யும் மாமிசமாகும். வெற்றிலை அவருக்கு மிக விருப்பமானது. கிடைக்க வசதியில்லை. ஆட்டின் குரலைப்போலும் குரலையுடையவர்தாம். எம்நாட்டு வேட்டுவரின் பாட்டிலிருந்து ஒரு பகுதியைக் காண்க:

'மூத்தி மராலா ஈ புச்சாலா கண்டவ வரெவ் மகெ லாமலா' (உடும்பு பிடித்துப் பொரித்துச் சாப்பிட வாருங்கள், எனது பிள்ளைகளே!)

இனி சேரமான் பெருமாள் நாயனார்புராணத்தில் வரும் வேடர் கூட்டமாகச் சென்ற பூசல்களின் காட்சியைக் காண்க.

"வில்வாங்கியலகம்பு
விசைநாணிற் சந்தித்துக்
கொல்வோமிங் கிட்டுப்
போமெனக் கோபத்தாற்
குத்தி

## டபிள்யூ. எவ். சிரிசேன

கொள்ளையடித்தலைத் தமது தொழிலாக நடாத்துகிறவரல்லர். சீவகசிந்தாமணியில் 1230-ஆவது செய்யுள் கூறுவதைக் காண்க:

"காழகம் மூட்டப் பட்ட
காரிருட் டுணியு
மொப்பான்
ஆழனை யுடும்பு பற்றிப்
பறித்துமார் பொடுங்கி
யுள்ளான்
வாழ்மயிர்க் கரடி
யொப்பான் வாய்க்கிலை
யறிதலில் லான்
மேழகக் குரலினோன்
வேட்டுவன்
றலைப்பட்டானே."

இதன்பொருள்: கருமை யூட்டப்பட்ட இருளாகிய துணியையும் ஒப்பான் ஒரு வேட்டுவன். ஆழ்ந்த புற்றுகளிலுள்ள உடும்புகளைப் பற்றி இழுத்தலால் நெஞ்சு உள்வளைந்துள்ளான். அவன் மயிர்க்கரடியொப்பான். வாய்க்கு வெற்றிலை அறிதல் இல்லான். ஆட்டின் குரல்

வெங்கையில் பண்டார
மெலாம்
கவர்ந்து கொள
விரிந்தோடி
பல்லையுடன் பறியுண்டா
ராரூரர்
மருங்கணைந்தார்"

இதன்பொருள்: வேடருக்கொண்ட பூசல்கள் வில்லை வளைத்து இறகையுடைய அம்புகளை நாணிலே தொடுத்து உம்மைக் கொல்வோம், திரவியங்களை விட்டுச் செல்லுமென்று கோபத்தினால் தாக்கி திரவியங்களையெல்லாம் கைப்பற்றியபின்னர் பறிக்கப்பட்டவர் தன்பத்தோடு ஓடி ஆரூரர் (சுந்தரமூர்த்தி நாயனார்) பக்கம் சேர்ந்தார்.

வேடுவரின் கருவியான வில்லும் அம்பும், அவரது இயல் தொழில்களாகிய கொள்ளையடித்தலும் பயங்கரசுபாவமும் இதிலிருந்து விளங்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை சென்ற நமது டாக்டர் சண்முகரத்தினம்

டாக்டர் க. சி. சண்முகரத்தினமவர்களின் நினைவு தினம் இன்று இம்மாதம் 30-ந் திகதியாகும் அவர் என் நெருங்கிய நண்பராயிருந்தவர் அவரை நினைவு கூரும்பொழுது நாமிருவரும் இந்தியாவிலிருந்தகாலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களும் நினைவுக்கு வருகின்றன.

டாக்டர் சண்முகரத்தினமவர்களை 1940-ம் ஆண்டு ஆனிமாதம் சென்னை வைஎம் சி ஏயில் சந்தித்தேன் இந்தியன் மெடிக்கல் கல்லூரியில் படிப்பதற்காக வந்ததாகவும் அங்கே இடம் எடுத்து விடுதியில் இருக்கப் போவதாகவும் சொன்னார் இரண்டாவதுநாளே இடம் எடுத்து பள்ளி விடுதியில் அமர்ந்துவிட்டார் எங்கள் சிநேகிதம் மெல்ல மெல்ல வளர ஆரம்பித்து படிப்பில் மிகவும் கவனம் செலுத்தி இரண்டு வருஷத்தில் சென்னையில் மாணவர் கல்லூரியில் பிரகாசமாய்த் திகழ்ந்தார்



### அரசியல் ஈடுபாடு

இதேவேளையில் அவர் அரசியல்துறையில் காங்கிரஸ்காரர்களுடனும்முற்போக்குவாதிகளுடனும் தொடர்புகள் ஏற்படுத்தி அவர்களோடும் அந்நியோன்னியமாக விருந்தார் இலங்கையிலிருந்து அரசாங்கத்தைக் கண்டித்த அரசியல் கைதிகள் இலங்கை போகம்பரை ஜெயிலை உடைத்து காவலாளராக இருந்தவரையும்கூட்டிக்கொண்டு கட்டுமரமார்க்கமாக இரவிரவாக இந்தியாவில் வந்திருந்தார்கள். ஜெயிலில் அகப்படாமல் இலங்கையிலேயே இருந்த (தற்பொழுது போக்குவரத்து அமைச்சராக இருக்கும்) திரு லெஸ்லி குணவர்தனவும் அவர்களுடன் வந்திருந்தார். ஒரு நாள் தன்னுடைய விருந்தாளி ஒருவரை எங்கள் 'கெஸ்ட் ஹவுசுக்கு' கூட்டி வரப்போவதாகவும் அவர்கள் அங்கே தலைமறைவாக இருப்பதாகவும் தெரிந்து கொண்டு அவரை ஓர் இராப்போசனத்திற்கு அழைத்து வந்தார். எங்கள் 'கெஸ்ட்ஹவுசில்' நானும் நண்பன் தியாகராசா அவர்களும் இருந்தோம். தியாகராசா அநேகம் முறை லெஸ்லியை இலங்கையிற் கண்டிருக்கின்றூர். இருந்தும் சண்முகரத்தினமவர்கள் லெஸ்லியை தியாகராசா அவர்களுக்குப் பெலிவாடா இராமனுசம் என அறிமுகம் செய்துவைத்தார் அநேகநேரமாக இராப்போசனம் முடிந்தும் பெலிவாடாவைக் கண்டுபிடிக்க முடியாமல் முடிவில் சண்முகரத்தினமவர்கள் தியாகராசா அவர்களுக்கு இவர்தான் லெஸ்லியென்றும் ஹாஷ்யமாக அறிமுகம் செய்து அவரை ஒரு டாக்ஸியில் கட்டிக்கொண்டு இருக்கும் இடம் சொல்லாமல் இரவு பதினொரு மணியளவில் சென்றுவிட்டார்கள்.

### சிறையில்....

இன்னொரு சந்தர்ப்பத்தில் "வெள்ளையனே வெளியேறு" என்ற மகாத்மாவின் கோஷத்திற்கு இந்தியன் மெடிக்கல் கல்லூரியில் படித்த பதினொரு பேர் பொலிசாரால் தாக்கப்பட்டு அவர்களை எக்மோர் கோர்ட்டில் விசாரணைக்கு அழைத்து வந்தார்கள். எக்மோர் கோர்ட்டால் இந்தியன் மெடிக்கல் மாணவர்கள் கைதிகளாக வந்திருப்பதாகவும் அவர்களில் இலங்கை மாணவர் ஒருவர் இருப்பதாகவும் கல்யாணசுந்தர முதலியாரவர்கள் எனக்குக் கூற நான் அங்கே சென்றபொழுது டாக்டர் உட்பட அப்பதினொரு பேர்களுக்கும் மூன்றரைமாதம் அலிப்புரம் ஜெயிலிலிருக்கத் தீர்ப்பாய் விட்டதென அறிந்தேன். சண்முகரத்தினம் அவர்களைச் சந்திக்க ஒரு வக்கீல் மூலம் மாஜிஸ்திரேட்டிடம் உத்தரவு பெற்று அவரைக் கண்டபொழுது தன்னுடைய பெட்டி சாமான்களை விடுதியிலிருந்து எடுத்து என் வீட்டிற்குக் கொண்டு போகும்படியும் அலிபுரத்திலிருந்து அறிவிப்பதாகவும் கூறி சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு இருந்தஎக்ஸ்பிரசில் ஏற பொலிசார் அழைத்துச் சென்றூர்கள். மாணவர் கூட்டம் பொலிசாரைக் கேலி செய்து கூச்சலிட்டபடி கூடி நின்றது.

ஜெயிலிலிருக்கும்பொழுது எனக்குக் கடிதங்கள் எழுதுவார். அக்கடிதத்திற்குள் யாழ்ப்பாண விலாசமிட்டு ஓர் கடிதம் இருக்கும் அக்கடிதத்தை எடுத்துச் சென்னையில் அதுவும் கீழ்ப்பாக்கம் தபாற்கந்தோரில் போடவேண்டும் என்றிருக்கும். வீட்டாருக்கும் மைத்துனிக்கும் அப்படியே கடிதங்கள் போட்டார். மூன்றரை மாதமும் ஜெயிலிலிருந்துதான் திரும்பினூர். அந்த மாணவர்கள் மன்னிப்புக் கோரி அரசாங்கத்திற்குக் கோரிக்கை விட்டால் அவர்களை மன்னித்து சிறையிலிருந்தும் விடலாமென அரசாங்கம் ஊர்ஜிதம்பண்ணியது அப்போது அவர் திவிரமாக தாங்கள் மன்னிப்புக் கோருவதற்கு ஒரு பிழையும் அரசாங்கத்துக்கு செய்யவில்லையென்றும் அப்படிக் கோரத் தேவையில்லையென்றும் மறுத்துவிட்டார். ஜெயிலால் வந்ததும் கல்லூரியில் படிப்பதற்கு இடமவிக்கமாட்டார்களென்றறிந்ததும் உள்நாட்டு அமைச்சராகவிருந்த சுப்பராயன் அவர்களைப் பிடித்த எல்லோரையும் கல்லூரியில் சேர்த்தாய் விட்டது.

அ. சின்னையா
பிறப்பு, இறப்பு, விவாக பதிவுகாரர்; சுழிபுரம்.

# வெளியீட்டு விழாக்கள்

"தமிழ்நாட்டிலே எத்தனையோ பெரும்பெரும் எழுத்தாளர்களது நூல்கள் தினமும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் வெளியீட்டு விழாக்கள் நடைபெறுவதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையிலோ அநேகமாக எல்லாத் தமிழ் நூல்களுக்குமே வெளியீட்டுவிழாக்கள் வைக்கிறூர்கள்!"

இந்த உண்மைகளைக்குறிப்பிட்டு வெளியீட்டு விழாக்களையும்- வெளியீட்டு விழாக்களை ஒழுங்கு செய்யும் ஈழத்து எழுத்தாளர்களையும் "மட்ட"மாகச் சிலர் பேசிக்கொள்வதை நானே பலதடவைகள் கேட்டதுண்டு. அடிக்கடி வெளியீட்டுவிழாக்கள் நடைபெறுவதை அவர்கள் கேவலம் எனக்கருதுகிறூர்கள் போலும்!

ஆனால் ஈழத்து எழுத்தாளர்களது இன்றைய நிலைமையை உணர்ந்தவர்களும், அவர்களது நலனில் அக்கறைகொண்டவர்களும் அப்படியெல்லாம் எண்ணமுடியாது.

எழுத்தாளன் நூல்களை அச்சிட்டு அவைகளைக் கடைகளுக்கு அனுப்பிவிட்டால் போதாது. ஓரளவு நூல் பற்றிப் பலரும அறியக் கூடியதாக விளம்பரம் செய்தால் தான் பலன் கிடைக்கும். ஆனால் எமது எழுத்தாளர்களிடமோ அதற்கெல்லாம் பணம் கிடையாது. அத்தோடு விளம்பரத்தால், எதிர்பார்க்கும்பலன் கிடைக்குமா கிடைக்காதா என்பதையிட்டும் அவன்சிந்திக்க வேண்டியிருக்கும். இந்த நிலையில் 'வெளியீட்டுவிழா' ஒன்றுதானே எமது எழுத்தாளர்களை ஓரளவுகைதூக்கி விடுகிறது.

அப்படி விழா நடத்துவதற்கும் பணம்தேவைதானே எனக்கேட்கலாம் அதற்காகத்தான் விழாவில் நூலின் முதற்பிரதியைப் பெறுவதற்கா செல்வமும் செல்வாக்குமுள்ள ஒருவரை ஒழுங்கு செய்கிறேம்.

இப்படியாக ஒரு விழாவை நடாத்துகின்றேம் என வைத்துக்கொள்வோம். அப்போது எழுத்தாளனுக்கும் அவனுடைய நூலுக்கும் எவ்வளவு விளம்பரம்- அது



பொ. சண்முகநாதன்

வும் இலவசமாகவே கிடைக்கிறதே. இன்ன நாளில் இன்னஎழுத்தாளரது இன்ன நூல் வெளிவருகிறது என ஒரு செய்தி! பின்னர் விழாவை அடுத்து நிகழ்ச்சிகள் பற்றிய செய்தி! அதன் பின்னர் விழாபபடங்கள்! இத்தனையும் குறிப்பிட்ட ஒரு பத்திரிகையில் மட்டுமல்ல பல பத்திரிகைகளிலும் வெளிவரும்" இது போன்ற பரவலான விளம்பரங்களுக்கு 'விழா' இல்லாவிட்டால் எழுத்தாளன் எவ்வளவு பணம் செலவுசெய்ய வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

இதுமட்டுமன்றி விழவில் சோற்ப பிரதிகள்தாம் விற்பனையானாலும் அத்தனை பிரதிகளுக்குமுரிய பணமும் எழுத்தாளனுக்குக் கழிவுகளின்றி மொத்தமாகக் கிடைத்துவிடுகிறது

விழா என்று ஒன்றில்லாவிட்டால் எழுத்தாளன் தனது நூலின் கணிசமான பிரதிகளை 'அன்பளிப்பாகவே' நண்பர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் வழங்கிடுவான். இன்னும் எத்தனையோ பேர்கள் அவனிடம் பணத்தைப் பின்னர் தருவதாகச்சொல்லி நூலை வாங்குவார்கள். அவர்களில் பலர் சொல்லைபடி நடந்துகொள்வதில்லை.

இதுபோன்ற பலகாரணங்களை முன்னிட்டுத்தான் ஈழத்து எழுத்தாளர்கள் தமது நூல்களுக்கு வெளியீட்டுவிழாக்கள் நடாத்துகிறூர்கள்; நடாத்தவேண்டியிருக்கிறது. எமது எழுத்தாளர்கள் தம்மை விளம்பரப்படுத்துவதற்காக அல்ல- தமது நூல்களை விளம்பரப்படுத்தவே இவ்வெளியீட்டு விழாக்களை நாடுகிறூர்கள்"

(11-ம் பக்கம் பார்க்க)

விரையுங்கள்! விரையுங்கள்! விரையுங்கள்!
எம்மிடம் கட்டுப்பாட்டு விலையில் பின்வருவனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்
அதிக பணத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.
ரொலறம்ஸ் — பொகுமால்ஸ்

| | வ வி | க வி | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| கிறுப்போன் நைலக்ஸ் சாறி | 60-00 | 54-30 | 1யார் | 9 | 05 |
| பிறை நைலோன் சாறி | 72-00 | 60-00 | 1யார் | 10 | 00 |
| சற்றின் நைலக்ஸ் சாறி | 70-00 | 60-00 | 1யார் | 10 | 00 |
| பட்டர் நைலோன் பிளேன் சாறி | 51-00 | 44-10 | 1யார் | 7 | 35 |
| கிறுப்போன் நைலக்ஸ் சொலிட் கலர் | 75-00 | 66-00 | 1யார் | 11 | 00 |
| கிறுப்போன் நைலக்ஸ் பூ போட்டது | 75-00 | 65 70 | 1யார் | 10 | 95 |
| நைலோன் லேஸ் 45" | 17-50 | 14-75 | 1யார் | 14 | 75 |
| பிறை நைலோன் 36" | 10-50 | 9-00 | 1யார் | 9 | 00 |
| நைலோன் லேஸ் 36" | 12-50 | 9-00 | 1யார் | 9 | 00 |
| பொலிஸ்டர் / விஸ்கோஸ்வூல் லேக்ஸ் புடவை 54" | 40-00 | 35-60 | 1யார் | 35 | 60 |

காலம் தாழ்த்தாது இன்றே விஜயம் செய்யுங்கள்.
ரொலறம்ஸ் — பொகுமால்ஸ்
46, 47 பிரதானவீதி. போன்: 7099 யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17)

அடுத்தநாள் எல்லோரும் பாடசாலைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதே இரண்டு வரிசைகள். அதே மௌனம் நடராசாவுக்குப் பின்னால் சோமு போகிறான். பேச்சுவார்த்தைகள் எதுவுமின்றியே, அவர்கள் இருவரினதும் நிலை அவர்களுக்குள்ளே பாசம் ஒன்றை வளர்த்துக்கொண்டிருந்தது.


நடராசா ஆறும் வகுப்பு சோமுவின் வகுப்புக்குப் பக்கத்தில் அவனது வகுப்பறை. ஆசிரியர்கள் வகுப்புக்குவரவில்லை சோமுவும் நடராசாவும் அடிக்கடி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தலைமையாசிரியர் வந்துவிட்டார். உதவி ஆசிரியர் இருவர் பின்னால்வந்து சேர்ந்தனர் வகுப்புகள் ஆரம்பிக்கும் என்ற எதிர்பார்ப்பில், சோமு ஆசிரியர்களை இடைக்கிடை பார்த்தபடியிருந்தான் ஆசிரியர்கள் தலைமையாசிரியருக்கு முன்னால் நின்று கதைப்பதில் ஈடுபட்டிருந்தார்கள்.

கச்சதிகுளத்தில் அடித்தலுக்கும் மிரட்டலுக்கும் பெயர்போன ஆசிரியர்கள் கூட, தங்கள் வகுப்புகளுக்குப் போகாமல், ஓரிடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்ததாகச் சோமுவுக்கு ஞாபகமில்லை. இங்கே, அகதிகளுக்கும் கொலனிச்சனங்களின் பிள்ளைகளுக்கும் அளிக்கப்படும் கல்வி, வெறுமனே பாடசாலைக் கூரையின் கீழ் சிலமணிநேரம் அமைதியாக உட்கார்ந்திருக்கச் செய்வது போலவே சோமுவுக்குப் பட்டது. இந்தக் கல்வியிலும் பார்க்க, பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு உதவுநேரர்களாய், வயல்களிலே கொஞ்சவேலை செய்வதே மேலானது என்று சோமு தன்னுள்ளே எண்ணிக்கொண்டான்.

பத்தரை மணியளவில், தலைமையாசிரியர், 'தேநீர்ப் பையன்'களைக் கடமைக்கு அனுப்பிவிட்டு எழுந்தார். "பாடசாலையைச் சுற்றிவர புல்லும் பூடும் கல்லுமாக இருக்கிறது எல்லா மாணவர்களும் எழுந்துசென்று அவற்றை அப்புறப்படுத்திச் சுத்தம் செய்யுங்கள்" என்று உரத்துக்கூவினார். உதவியாசிரியர் ஒருவர் இந்தக்கரைக்கும் மற்றவர் அடுத்தகரைக்கும் சென்று மாணவர்களை முடுக்கிவிட்டார்கள்.

திறந்துவிடப்பட்ட வெள்ளாடுகள் போல, (ஐயோ, பாவம், அப்படி நினைக்கக் கூடாது) மாணவர்கள் அங்குமிங்குமாகச் சிதறிஓடினார்கள். கையிலே இரண்டுபிரம்புத் துண்டங்களோடு உதவியாசிரியர்கள் வெளியேவந்த போது, கிடைத்த விடுதலை




உணர்ச்சிமிகியாகமாற, மாணவர்கள் குனிந்து புல்லையும் பூண்டையும் பிடுங்கினார்கள். இந்தமுறைக் 'கல்வி' அவர்களுக்குப் பழம்பாடம் போலிருக்கிறது; குனிந்தவர்கள் நிமிராது கதைத்துக் கொண்டே வேலையைச்செய்தார்கள்.

சோமு குனிந்தபடியே நகர்ந்து நகர்ந்து நடராசாவைக் கிட்டிவந்தான். இதை எதிர்பார்த்தவன்போல, அகன்ற கண்களோடு திரும்பி, நடராசா சோமுவைப் பார்த்துச் சிரித்தான்.

அவனுக்கும் சோமுவின் வயதுதானிருக்கும். ஆனாலும், உலகத்தின் போக்கின் "ஆனா ஆவன்னா"வே தெரியாத குழந்தையாய், பயத்தின் பிடியிலே பிதுங்கும் விழிகளோடு அவன் சிரித்தான்.

சோமுதான் கதையைத் தொடங்கினான்:

"நீ ஆறும் வகுப்பா?"

"ம்".

நடராசாவின் இந்த "ம்"மிலே சோமுவுக்குப் பல விஷயங்கள் தெரிந்தன.

"நீ இங்கை வந்து கனகாலமா?"

"ரெண்டு வரிசம்"

'இரண்டு வருஷமாய், தினம் தினம் ஒன்றையே செய்துகொண்டு, உடலையும் உள்ளத்தையும் அடிமைகளாக்கி, சிறைக்குள்ளிருக்கிறவனாய் இருந்த நடராசா, அழுது வெடிப்பதோடு மட்டும் நின்றுவிட்டானே, ஏன் இன்னும் எங்காவது ஓடிப்போகவில்லை?' என்றகேள்வியில் சோமு சில நமிஷங்களை ஓடவிட்டான்.

"ம். எல்லாரையும்போலை, நீயும் இருக்கிறாய் எண்டு நான் நினைச்சேன். ஆனா, ராத்திரி உன்னைப் பார்த்த பிறகு உனக்கு ஏதோ வருத்தம்-மனவருத்தம் இருக்கிறதாக நினைக்கிறேன். அப்பிடி ஏதுமிருந்தா எனக்குச் சொல்லு. நான் இங்கை இருக்கப் போறவனில்லை. இண்டைக்கு விடிஞ்சதுமே எங்கேயாவது போய்விடுறதாகத் திட்டம் போட்டிருந்தேன். ஆனா உன்னைப்பார்த்த பிறகு, அந்தத்திட்டத்தைக் கைவிட்டாச்சு."

கேட்டுக்கொண்டிருந்த நடராசாவுக்கு, தன்னையொத்த ஒரு பையன் இப்படியெல்லாம் பேசுகிறானே என்று ஆச்சரியம் பிறந்திருக்க வேண்டும். திறந்த வாயை மூடாமலே பூடொன்றைப் பற்றிய கை நிலைத்துவிட, சோமுவைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

சோமுவின் கண்கள் ஒருமுறை நான்குபுறமும் சுழன்றன. ஆசிரியர்கள்தேநீரைச் சுவைப்பதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்கள். புதுவாழ்வு நிலையச்சிறுவர்கள் அங்குமிங்குமாகச் சிதறுண்டு, புல்பூண்டுகளை விசுவாசத்தோடு பிடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

சோமு திரும்பி நடராசாவைப் பார்த்தான். அவன் இன்னும் அந்த ஆச்சரியத்திலே மூழ்கிக் கிடந்தான்.

"ம். சொல்லு. நீ எனக்குத் தம்பி மாதிரி. வெக்கமோ அச்சமோ படாமை உனக்கிருக்கிற வருத்தங்களையெல்லாம் சொல்லு. உனக்கு உதவி செய்யாமல், இந்த மறியலிலையிருந்து நான் வெளியாலை போகவே மாட்டேன்".

இந்த உறுதிமொழி நடராசாவின் கண்களில் நீரை வரவழைத்துவிட்டது. அவன் குனிந்து, கை பற்றியிருந்த பூட்டை ஆட்டி அசைத்துப் பிடுங்குவதாகப் பாவனை செய்தான். அவனையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த சோமு, 'நடராசா அழாமல் காரியத்தைச் சொல்லு. யாரார் வது பார்த்தா வினையாகிவிடும்' என்றான்.

மெதுவாக முகத்தைத் திருப்பிய நடராசா, இரண்டு துளி கண்ணீரை நிலத்தில் படியவிட்டு 'அம்மாவைப் பார்க்கவேணும் போலிருக்கு' என்றான்.

'அம்மாவா?'

'அம்மா இருந்தா, இவன் அனாதை இல்லையா?'

'அப்பாவும் இருப்பாரா?'

சூழ்நிலையை உத்தேசித்து உள்ளே நடக்கிற அனைத்தையும் வெல்லாம் உதறிவிட்டு சோமு கேட்டான்.

'அம்மாவா, அவ எங்கே இருக்கிறா?'

நடராசாவின் கண்களில் மறுபடியும் நீர் துளித்தது. புறங்கையால் கண்களைத் துடைத்துக்கொண்டே தழதழத்த குரலில் அவன் கூறினான்.

'அம்மா யாப்பாணத்திலே இருக்கிறா. இந்த ஐயாவுக்கு ஒரு தம்பி. அவர் வீட்டிலே உதவி ஒத்தாசை செய்து கொண்டிருக்கிறா.'

['ஓ']

'அவ உன்னைவந்து பார்க்கிறதோ, நீ அவவைப்போய் பார்க்கிறதோ இல்லையா?'

'நான் இங்கை சேந்தப்புறம் ஒரு தடவை வந்து பாத்திருக்கிறா. அதுவும் ஒரு வருசத்துக்கு முந்தி.'

'ஏன் நீ போய்ப்பாத்து வரமுடியாதா?'

'நான் எப்பிடிப் போறது? என்னைப்போக விடமாட்டாங்கள் போகவும் எனக்கு வழிதெரியாது; காசுமில்லை.'

'அதுசேரி. யாழ்ப்பாணத்திலை அவ இருக்கிறவிலாசம் தெரியுமா?'

'அதுவும் தெரியாது. இரண்டுமுறை 'பாக்க ஆசை யாக்கிடக்குது' எண்டு காயிதம் எழுதி, அம்மாவுக்கு அனுப்பச் சொல்லி ஐயாவிடம் கொடுத்திருந்தேன் அவர் போட்டாரோ என்னவோ பதிலும் இல்லை, அம்மாவும் வரவில்லை.'

['ஐயா காயிதத்தை குப்பைக்குள் அனுப்பியிருப்பார்.]

'சரி, உனக்கு அப்பா—?'

'அப்பா செத்திட்டார், அம்மாவும் நானுந்தான்வீட்டுவேலை ஏதாவது எடுத்துத் தரச்சொல்லி அம்மா நாலு பேரிட்ட சொல்லிவைச்சிருந்தா. ஒருநாள் இந்த ஐயா காரிலை வந்து சேர்ந்தார். என்னை இங்கை சேர்க்கிறதாயும் அம்மாவுக்கு ஒரு வீட்டிலை வேலை வாங்கித்தாறதாயும் சொல்லிக் கூட்டி வந்தார். அம்மாவும் ரெண்டு நாள் இங்கேதான் இருந்தா. பிறகு ஐயாவின் தம்பி ஒருநாள் குடும்பத்தோடு வந்து இங்கை தங்கினார். மற்றநாள் அம்மாவைத் தங்கள் வீட்டிலை வேலைக்கு வைச்சுக் கொள்ளுறதாகச் சொல்லி கூட்டிக்கொண்டே போய் விட்டார். ஒருவரிசங்கழிச்சு அம்மா ஒருநாள் வந்து என்னைப் பார்த்தா. பிறகு போனவ இன்னும் வரவுமில்லை, காயிதம் போடவுமில்லை.'

நடராசாவின் கண்களில் மீண்டும் நீர் திரையிட்டது.

'ஐயாவைக் கேட்டுப் பாத்தியா?'

'அவர் என்னைப்போகவிட மாட்டார். காயிதம் எழுதித்தா அனுப்புறன்' எண்டு சொல்லுறார். அதைக் கண்டா அம்மா வந்து பாப்பாவாம்.'

எவருக்குப் புரியாவிட்டாலும் நடராசாவின் வேதனை-அதன் ஆழம் சிறியவனாயிருந்தாலுங்கூட சோமுவுக்கு முழுமையாகத் தெரிந்தது.

கையாலாகாதவளாயிருந்தாலும் அவள் நடராசாவின் தாய் நடராசாவும் அநாதையல்லன். ஆனாலும் இன்றைய சமூகச் சூழ்நிலை தாயையும் மகனையும் பிரித்துவைத்து அவனைப்போக்கற்றவனாக்கி

(10-ம் பக்கம் பார்க்க)

## சைவத் தமிழரின் பொற்குவை

# ஈழத்துச் சிதம்பர புராணம் வெளிவர உதவுவீர்

**— டி. டி. நாணயக்கார —**

[திரு. டி. டி. நாணயக்கார தமிழ்மொழிப்பற்றுள்ள தமிழறிந்த சிங்களவர். ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் மீது பண்டிதர் இளமுருகனார் பாடப்பெற்ற 'ஈழத்துச் சிதம்பர புராணம்' நூல்வடிவில் வெளிவருவதற்குப் பணமுடை காரணமாயிருப்பது திரு. நாணயக்காராவுக்கு வேதனையை ஏற்படுத்தி, அவ்வேதனை இங்கு விண்ணப்பமாக வெளிவருகிறது.]

காரைநகரில் உள்ள ஈழத்துச் சிதம்பரம் என்ற சிறப்புப் பெயர்கொண்ட தேவஸ்தானத்தைப்பற்றி அறியாத பச்சைக் குழந்தைகள்கூட யாழ்ப்பாணத் தமிழர்களுக்குள் இல்லை என்று எண்ணுகிறேன். இந்த சமயத்தவர்களுக்குச் சிதம்பரம்போல் புண்ணியத்தலம் எதுவுமே இல்லை அங்கே சுவாமிதரிசனஞ் செய்து வழிபாடு செய்வது இம்மையிலும் மறுமையிலும் நலம் பயக்கும் என்பது அவர்களுடைய நம்பிக்கை, பௌத்தர்களுக்குப் புத்தகயாவும் இஸ்லாமியர்களுக்கு 'மக்கம்' என்ற இடமும் எவ்வளவு சிறந்ததோ சைவர்களுக்குச் சிதம்பரமும் அவ்வளவு சிறந்ததாகும். ஆனால் இங்குள்ள இந்துக்கள் எல்லோருக்கும் அங்கே நடைபெறுகிற இருவிழா போன்ற சமயசம்பந்த வைபவங்களில் பங்கு பற்றுவதும் யாத்திரை செய்வதும் சுலபமானது அல்ல, அக்கஷ்டத்தை நீங்குவதற்கு இங்கேயும் அதற்குச் சமமான ஒருபெரிய தேவஸ்தானம் கட்டப்பட்டது. அதுதான் ஈழத்துச் சிதம்பரம் என்ற திருப்பெயர் பெற்றுள்ளது இத்தலம் பல விசேடங்கள் பொருந்தியது மற்றொரு சிறப்பும் இப்பொழுது இத்தலத்திற்கு ஏற்பட்டுள்ளது 'புலவர்மணி பண்டிதர் சோ இளமுருகனாரால் இத்தலம்மீது பாடப்பட்ட ஈழத்துச் சிதம்பர புராணம்தான் இவ்வகைச் சிறப்பை அளிக்கிறது

இதுவரை ஏடுகளிலிருந்து வந்த இப்புண்ணியத்தலத்தின் முழுவரலாற்றை இப்புராணத்தில் பாயிரம் சருக்கம், காரைநகர் சருக்கம், திண்ணைபுரச்சருக்கம், தவம்புரி சருக்கம், ஐயனார் கோயில்காண் சருக்கம், சுந்தரேசர் கோயில்காண் சருக்கம், அந்தணர்பூசைபுரி சருக்கம், சோமாஸ்கந்தச் சருக்கம், திருக்கோயிற் பாதுகாவலர் சருக்கம், விழாவியர் சருக்கம் என்னும் பத்துச் சருக்கங்களில் 850 செய்யுள்களில் தலபுராணத்தை அடக்கியுள்ளார் அவர் சைவசித்தாந்திகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிற இப்புராணம் இலக்கிய இரசிகர்களுக்கும் இலக்கணங் கற்போருக்கும்மட்டுமன்றி உரை எழுதப் பயில்வோருக்கும் சொல்லாராய்ச்சிக்காரருக்கும் கைநூலாக இருக்கும் சுருங்கக்கூறின் இந்நூல் சைவத் தமிழருக்கு ஒரு பொற்குவை எனலாம்.

உண்மையான பக்தியுள்ளவர்கள் இப்படிப்பட்ட தெய்வத்திருவருள் அடங்கிய புத்தகமொன்றை வீட்டில் வைத்துப் பாராயணஞ் செய்வதால் இம்மையிலேயே கிடைக்கக்கூடிய நன்மைகள் பல உள. விசேடமாகக் கடவுளை நம்புவது மூடத்தனமென்றும், கடவுள் இல்லையென்றும், கோயில் கட்டுவது வீண் செலவென்றும் வாதஞ் செய்யும் நாஸ்திகவாதிகளின் மூடத்தன்மையை- அறியாமையை- அழிப்பதற்கு இஃது ஓர் அருமருந்தாகும். இப்புராணத்தில் உள்ள பத்துச் சருக்கங்களில் ஒன்பது சருக்கங்கள் அச்சிடப்பட்டு விட்டன. அண்மையில் விடுத்துள்ள ஓர் வேண்டுகோளின்படி கடைசிச் சருக்கத்தின் அச்சுவேலைக்கும் அட்டை போட்டுப் புத்தகத்தை உருவாக்குவதற்கும் பணமில்லாத காரணத்தினால் அவை நடைபெறவில்லை என்று அறிந்து கவலைப்பட்டேன்.

சென்ற மூன்று நூற்றாண்டு காலத்தில் வெளிவந்த நூல்களுள் சிறந்த நூலாகிய இப்புராணம் கூடிய விரைவில் வெளிவருவது சைவத்துக்கும் தமிழுக்கும் அளவிறந்த நன்மைதருவதாகும். ஆகையால் இலங்கை முழுவதும் பரவியுள்ள காரைநகர் வியாபாரிகளும் மற்றும் தமிழுக்குத் தொண்டுசெய்யும் ஆயிரக்கணக்கானோரும் தமக்கென்று ஒவ்வொரு பிரதியை முன்கூட்டியே பதிவு செய்துகொள்வதன் மூலம் இப்புராண நூலை விரைவில் வெளிக்கொணரலாம். பிரதியொன்றின் விலை இருபது ரூபாவாகும், இப்பொழுதே பணம் அனுப்பி இப்பொதுப் பணிக்கு உதவி செய்யுங்கள், எனது பங்கை நான் செலுத்திவிட்டேன், பணம் அனுப்பவேண்டிய முகவரி: பதிப்பாசிரியர். 'ஈழத்துச் சிதம்பர புராணம்', சிவன் கோயில், காரைநகர்.

# நீர் ... ஏழு ...

'சிதம்பரம் போய்வருகிறேன்' என்று ஒருவர் கூறினால் நடராஜப்பெருமானைத் தரிசித்துவருகிறார் என்பது அர்த்தம். திருப்பதிக்குப் போய்வருகிறேன் என்று கூறினால் திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமானைத்தரிசித்து வருகிறார் என்பது கருத்து. சிதம்பரத்திலே அண்ணாமலைச் சர்வகலாசாலை உண்டு. பெரிய சினிமாத்தியேட்டர்கள் உண்டு. திருப்பதியிலும் அப்படி உண்டு. இவ்வூர்ப்பெயர்களைக் கூறியவுடனே அங்குள்ள கோயில்களைக் குறிப்பது போன்று ஏழாலை என்றவுடனே ஏழு ஆலயங்களுமே நினைவுக்குவரும். ஏழு ஆலயம் என்பது திரிந்து ஏழாலை என வந்தது. ஏழு ஆலயங்கள் ஒரே சூழலில் அமைந்திருப்பதை நாம் இன்றும் காணலாம்.

நீர்வளமும், நிலவளமும் சிறந்தது ஏழாலை. 14, 15 அடி ஆழத்திலே நாள் முழுவதும் இறைத்தாலும் வற்றாத நீர்ப்பெருக்குடைய பல கிணறுகள் உள்ளன. சிறுவற்றிய கிணறுகளும் ஒருசில நிமிடங்களுக்குள்ளே ஊற்றெடுத்து பழைய நிலையை அடைந்துவிடுகின்றன. நீர் மிகத்தெளிவுடையது. தண்ணீர்க்கு குறைவில்லாவிடினும் முதன்முதல் ஏழாலைத்தண்ணீரை அருந்தும்வேற்றூரார் நல்ல ருசியுடைய தண்ணீர் என்று சொல்வதைப் பல முறை கேட்டுள்ளேன் இப்படி ருசியான தண்ணீரைக் குடித்த அயலூ வர். 'இந்தக் கிணற்றி ஒன்றைத் திருமுருக எடுத்துக் கொண் போனாலோ—' என் நினைத்தார். அதனைச்செ வில் முடிக்கவும் தொடங்கி னார். இரவுநடுச்சாமம் இரு கும். ஒரு பத்தைந்து ஆட் களுடன் வந்து சேர்ந்தார் மண்வெட்டி, கடப்பாரை கயிறுகளுடன் வந்து கிண றைத் தூக்குவதற்கேற் முன்னீடுகளைச் செய் இந்த ஆரவாரம் கேட் விழித்த ஊர்மக்கள் அவ களது அறியாமைக் இரங்கி "ஏழாலையில் கிண காவிகள்' என்ற பட்ட பெயரை அளித்து அனுப் வைத்தனர். இவர்கள் கூ டிய பட்டப்பெயர் காலப் பில் இவர்களுக்கே வழங் வரவும் செய்தது.

நான் ஏழாலைக்கிராம த்தைச் சேர்ந்தவன் என் யோகர் சுவாமிகளுக்குநன் தெரியும். என்னைக்கண் வுடன் "கிணறு காவப்போ வில்லையோ?" என்று சுவா கள் கேட்பார்கள். 'ஏழால கிணறு காவி' என்று லூர் நண்பர்கள் இள யில் எம்மைப்பகடி பண் வது வழக்கம். அவர் பேச்சைக் கேட்கும்போ உள்ளத்தில் ஆத்தி பொங்கிவரும். அறிந்தனாலோ என்னவோ சுவாமிகள் என்னைக்காணு போதெல்லாம் "ஏழால கிணறு காவி' என்று அ பார்கள். "நின் அடியா ஏசப்பட்டேன்" என்று வாசகப் பெருமானார் யது போல யோகர் சு ளால் அழைக்கப்படுவ பெருமையாகக் கொ டேன். அதனால் மன சாந்தி அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர் வளமும் நில வளமும் சிறந்த ...ு ஆலயங்கள் கொண்ட ஏழாலை

குறையொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒருநாள் சுவாமிகள் தனிமையில் இருக்கும் போது சுவாமியைச் சென்று தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கண்டதும் 'ஏழாலையின் கிணறுகள்' வந்துவிட்டார் என்று கூறினார்கள். நானும் சுவாமிகளுடன் வேடிக்கையாகப் பேசச்சந்தர்ப்பங் கிடைத்ததேஎன்று நினைத்து, 'மாரிகாலத்தில்தான் சுவாமி வெள்ளத்தினால் கிணற்றுச் சுவர்கள் காவிநிறமாயிருக்கும் இப்போ கோடையான படியினால், நிறம் மாறிவிட்டது' என்றேன்.

சுவாமிகள் உரக்கச் சிரித்துக்கொண்டே, நல்ல கருத்துதான். உனக்கும் ஊர் அபிமானம் இருக்கிறது போல என்று கூறி,

பெற்றுவருகிறது. விரதம் அனுஷ்டித்துப் புராணம் கேட்கும் வழக்கம் மக்களிடையே பரம்பரையாக வேரூன்றி உள்ளது எங்கள் ஊரில் வாழ்ந்த தம்பையா உபாத்தியாயர், அருளானந்தசிவம், இராமசாமி போன்ற பெரியவர்கள் அயலூர்களிலும் அழைக்கப்பட்டு, அவர்கள் கூறிய பயனால் பயன்பட்ட மக்கள் இன்றும் பலர் இருக்கின்றார்கள்.

## ஒருமைப்பாடு

மக்களில் நூற்றுக்கு நூறு வீதமானோர் கமக்காரர். கமக்காரருக்கு உதவியான மற்றைய எல்லாத்தொழிலாளர்களும் இங்கு வசிக்கின்றார்கள். ஒருவருக்கொருவர் உதவியாக இணைந்து வாழ்வதால் சாதி வேறுபாடற்ற

றும் மக்கள் வந்து பால் வாங்கிச் செல்வதுண்டு. பால் காசுக்கு விற்றால் பாவம் என்று கருதிய அந்தக் காலம்; தகப்பனார் காலத்தில் கோயிலுக்குப் பால் சும்மாகொடுத்தாலும் பால் காசுக்கு விற்றார்கள். எனது காலத்தில் பசுக்களே பலரிடம் இல்லை பசுவைத்திருப்பவர்களும் தண்ணீர் கலக்காமல் பால் விற்றால் பாவம் என்று சொல்லும் அளவுக்கு மனநிலை மாறி உள்ளார்கள். மூன்று தலைமுறைகளுக்கிடையே ஒரு மதத்தின் நிலை இப்படியாகி உள்ளது.

'இன்றும் எங்கள் ஊரில் உள்ளவர்கள் கோயிலில் அபிஷேகம் என்றால் பால், இளநீர், கரும்பு போன்ற பொருட்கள் இனமாகவே

என்ற பெயரோடு விளங்கினார்கள். ஹரிஜனர்களுடன் உடன்இருந்துஉண்டுபாடசாலைகளில் ஹரிஜனப் பிள்ளைகளுக்குசம சனம் கொடுத்து ஹரிஜனர்களுக்குச் சமயதீட்சையும் வைத்துச் சமரசத்தை முதன்முதல் உண்டாக்கிய பெருமை உயர்திரு அருளானந்தசிவம் அவர்களையே சாரும்.

இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வரும் சைவசித்தாந்தப் பேரறிஞர்கள் அருளானந்தசிவம் அவர்களைச் சந்தித்து அவருடன் உரையாடியே செல்வர் அவர்களால் உண்டாக்கப்பெற்ற நால்வர் மடாலயம் அவ்வூர் மக்களின் அடியார் பக்திக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பரமஹம்சருக்கு விவேகானந்தர்போல சடை

தாமோதரம்பிள்ளை அவர்கள் பிறந்து வாழ்ந்த பெருமையும் ஏழாலையையே சேரும். மல்லாகம் சந்தியிலிருந்து கிழக்கு முகமாக ஏழாலையை ஊடறுத்துக் கொண்டு ஒரு தெரு செல்கின்றது அது அடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியைச் சென்றடைகின்றது. கிட்டத்தட்ட 3 மைல்தூரம் தான் இருக்கும் அத்தெரு. நாற்பதுக்குமேற்பட்ட வளைவுகளை உடையதாய் விளங்குகின்றது. மலைநாட்டுப் பாதைகளில் பிரயாணம் செய்யாதவர்களுக்கு அதை மலைநாட்டு மாதிரியான தெரு என்று காட்டலாம். மக்கள் நெருங்கிக் குடியேறிய பின்பே தெரு திறக்கப்பட்டுள்ளது. அதனால் வந்த வினையே இத்தனை வளைவுக்கும் காரணமாகும். குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இரு இடங்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து இத்தெருவழியாகப் பஸ் போக்குவரத்து நடைபெறுகின்றது. இத்தெருவழியே சென்றால் நால்வர் மடாலயத்தையும் ஏழு ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

தற்காலத்திலே வைத்தியரிடம் சென்றால் அவர் உடல் முழுவதையும் பரிசோதித்துவிட்டு உனக்கு என்ன செய்கிறது என்று கேட்பார். அல்லது நோயாளியை அழைத்துச் சென்றவர்களிடம் கேட்பார். அவர்கள் சொல்வதைக்கொண்டே நோயைத் தீர்மானிப்பார்கள். நோயாளி நோய்க்குரிய சில குறிப்புகளைச் சொன்னதை தனது [illegible] வைத்தியர் அனுபவத்தைக் கொண்டு

## திருக்கோலத்துடன் காணும் கமக்காரரை சிவனடியார்களோ என்றெண்ணத்தோன்றும்

'பெற்றதாயும்
பிறந்தபொன்னாடும்
நற்றவவானிலும்
நனிசிறந்தனவே'

என்ற பாடலையும் கூறி, கொஞ்சநாளைக்கு இந்த அபிமானமும் இருக்கத்தான் வேண்டும். இந்த அபிமானங்கள் எல்லாம் ஒழிந்தால் தான் காணும் கடவுளைக் காணலாம் என்றும் சொன்னார்.

எங்கள் ஊர்மண் நன்கு சிவந்தமண் எங்கள் ஊர் மண்ணில் வெறுங்காலோடு நடந்தால் காலில் ஒட்டிய மண்ணின் நிறம் மாற ஒரு வாரம் செல்லும். இரும்புச் சத்து நிறைந்த மண். காய்கறியும் பழவகையும் மிக ருசியானவை பாகற்காயை யாரும் விரும்பி உண்பதில்லை ஏழாலையில் பாகற்காய் என்றால் விருப்பத்தோடு வாங்கிச் சென்று சமைத்து உண்பதுவழக்கம் அதற்கென்று தனிப்பட்ட ருசி ஒன்று உண்டு

சமூகம் ஒன்று வாழ்ந்து வருவதை இன்றும் பார்க்கமுடிகிறது. அதிகாலை 5 மணிக்கே மக்கள் நித்திரைவிட்டெழுந்து தோட்டங்களுக்குச் சென்று பயிர்களுக்கு நீர் பாய்ச்சி தோட்டப்பயிர்களில் பெற்றுக்கொள்ளும் பயன்களைச் சுன்னாகச்சந்தைக்குக் கொண்டுசென்று விற்று காலை 9 மணிக்குள் வீடுவந்தடைந்து விடுவர். மறுபடியும் மாலை 4 மணிக்குத் தோட்டம் சென்று இரவு 7 மணிவரை நின்று வீடுவந்து சேர்வர். இடைப்பட்ட நேரத்திலே வீட்டில் புராணங்கள், திருமுறைகள், பாரதம், இராமாயணம் போன்ற நூல்கள் படித்து மகிழ்வர். இந்த வாழ்க்கை அந்தக்காலம் காலச்சுழற்சியின் வேகத்தினால் இந்தக் காலத்தில்பலகுடும்பங்களுக்கிடையே அந்த வாழ்க்கை முறை மாறியிருந்தாலும் சில குடும்பங்களுக்கிடையே அந்த வாழ்க்கை இன்றும்

கொண்டுசென்று கொடுக்கும் வழக்கம் உடையவர்களாய் இருக்கின்றார்கள். இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பக்திப்பண்பாடு பரம்பரையாக இருந்துவருகின்றது.

எங்கள் ஊரில் கோயில் பல எழுந்ததற்கு நண்பர் ஒருவர் வேடிக்கையான கதை ஒன்று கூறினார். ஒரு கோயிலில் புராணம் படித்துவந்தார்கள். பெரியவர் ஒருவர் வழக்கமாக ஒரு தூணில் சாய்ந்திருந்துகொண்டே புராணத்தைக் கேட்டுவந்தார். பல ஆண்டுகளாக அத்தூண் அவருக்கே சொந்தமாகிவிட்டது. ஒருநாள் அப்பெரியவருக்கு வேண்டாத ஒருவர் வந்து பெரியவர் இருந்த இடத்தைப் பிடித்துக்கொண்டார். பெரியவர் வந்து செருமினார், உறுமினார். இருந்தவர் அசையவில்லை அடுத்தநாளே பெரியவர் அக்கோவிலுக்குப் போட்டியாக ஒரு கோயில் கட்ட ஆரம்பித்து திருப்பணி முடிந்து பூசையைக் குறைவற நடத்தியதோடு முன்னைய கோயிலில் படிக்காத புராணங்களையும் படிக்கச் செய்தார் இந்த நிகழ்ச்சி உண்மையாக இருந்தாலும் அதனை நாம் வரவேற்கவேண்டிய தொன்றே. போட்டியினால் மனித சமுதாயமே அழிந்துபோகிற செயல்கள்பல நிகழ்வதைப் பார்க்கிறோம். இப்போட்டியினால் கோயிலொன்று கிராமத்திற்குக் கூடியது. இத்தகையபோட்டி வரவேற்கப்படவேண்டியதே.

## அருளானந்தசிவம் என்ற பெரியார்

கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடவேண்டுமென்ற கிளர்ச்சி தோன்றுவதற்கு முன்னமேயே எங்களூர்க் கோயில்களுக்குள் சைவசமயத்தவர்கள் சாதிபேதமின்றி வரத்தலைப்பட்டுவிட்டனர். இதற்கு மூலகாரணமாகஇருந்தவர் சைவசித்தாந்த வித்தகர் உயர்திரு ஐ. பொன்னையா அவர்கள். அவர்கள்தான் பிற் [illegible]

வரத சுவாமிகளுக்கு அருளானந்தசிவம் அவர்கள் வாய்த்தார்கள்.

கடையிற்சுவாமிகளுடைய பரம்பரையில் வந்தவர்கள் சடைவரத சுவாமிகள் அவருடைய சீடர்தான் அருளானந்தசிவம் ஆகவே கடையிற் சுவாமிகளுடைய அடியார் பரம்பரை ஒன்று எங்கள் கிராமத்திற்கு அ[illegible] கூறிவருகிறது என்றால் அது மிகையாகாது.

ஏழாலை யாழ்ப்பாணத்திலுள்ளகிராமங்களுள் மிகப்

## எங்கள் கிராமம் - 14

நா. முத்தையா
('ஆத்மஜோதி' ஆசிரியர்)

### ஏழாலை வாசிகள் பக்தி மிக்கவர்கள்

நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஏழாலைவாசிகள் பக்திவளமும் பொருந்தியவர்கள் என்பதற்கு ஊரின் பெயரே சாட்சியாகும். சிவாலயம், விக்னேஸ்வரர் ஆலயம், சுப்பிரமணியராலயம், ஈஸ்வரி ஆலயம், வயிரவர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், பெரியதம்பிரான் ஆலயம் ஆகிய இந்த ஏழு ஆலயங்களும் ஒரு சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ளன. இவற்றைவிட, பதினைந்துக்கதிகமான சிறு ஆலயங்களும் இவ்வூரில் உண்டு

கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன் சொல்லும் வழக்கம் அன்று தொடக்கம் இன்றுவரை இக்கோயில்களிலே நடை

இருந்துவரத்தான் செய்கிறது சமய அனுட்டானம் அருகிவரும் இக்காலத்திலும் இக்கிராமத்தில்சமயதீட்சை பெறுதவர்களைக் காண்பது அரிது

கமக்காரர்கள் விபூதித் திருக்கோலத்துடன் தோட்டத்தில் நின்று வேலைசெய்யும் போது பார்த்தால் சிவனடியார்கள்தான் கமத்தொழில் செய்கிறார்களென்று சொல்லத்தோன்றும் வாழையில் முதல்தரமான பழத்தையும் பசு கன்று போட்டால் முதல் எடுக்கும் பாலையும்கோயிலுக்குக் கொடுக்கும் பழக்கம் இன்றுமுண்டு

### அன்றும் இன்றும்

எனது தகப்பனாருடைய தகப்பனாரிடம்பலபால்தரும் பசுக்கள் இருந்தன. மருந்துக்கு என்றும், நோயாளிக்கு என்றும், கோயிலுக்கு [illegible]

பெரியது வடக்கே மயிலிட்டி குரும்பசிட்டியையும் கிழக்கே புன்னாலைக்கட்டுவனையும் தெற்கே ஊரெழு சுன்னாகத்தையும் மேற்கே மல்லாகத்தையும் எல்லையாக உடையது ஏழாலைக்கென்றே தனியான கிராம சபையும் தபாற்கந்தோரும் அமைந்துள்ளன இக்கிராமம் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என்ற ஐந்து பெரும் பிரிவுகளை உடையது ஆத்மீக வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் ஒரு பரம்பரையைக் காத்து வந்திருக்கின்றது இக்கிராமம் கிறிஸ்தவமும் சைவமும் போட்டிபோட்டுக்கொண்டு வளர்ந்துள்ளன இக்கிராமத்தில் நான்கு கிறிஸ்தவ ஆலயங்கள் உள்ளன என்றால் அதைக்கொண்டே கிராமத்தின் பரப்பையும் மக்கள் தொகையையும் ஓரளவு யூகிக்கலாம். 8 பாடசாலைகளுக்கு இருப்பிடமாக அமைந்தது இக்கிராமம். இதனால் சராசரி குடும்பத்தில் ஓர் ஆசிரியராவது இருப்பார்.

### புலவர்கள் அளித்த பெருமை

சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் கல்வி கற்பித்த பெருமையும். சி. வை.

தீர்மானிக்கத் தவறுவதுமுண்டு நோயாளிகள் கஷ்டப்படுவதுண்டு. அருளானந்தசிவம் அவர்கள் கைநாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு உனக்கு இன்ன இன்ன குறிகள் இருக்கின்றனவா என்று கேட்பார் அவர் சொல்லும் அத்தனை குறிகளும் இருப்பதாக நோயாளி ஒப்புக்கொண்ட பின்பே நோய் இன்னதெனத் தீர்மானித்து மருந்துகொடுப்பார். பணம் கேட்டுவாங்கும் வழக்கமோ அன்றி பில் அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளும் பழக்கமோ முற் பணம் பெற்றுக்கொள்ளும் பழக்கமோ அக்காலத்தில் இல்லை நோய் மாறிய பின் அவர்களாக விரும்பிக் கொண்டுவந்து கொடுக்கும் பணத்தையே பெற்றுக் கொள்ளுவார்கள். பரராஜசேகரம் போன்ற பல ஆயுர்வேத வைத்திய நூல்களை அச்சுக்குக் கொண்டுவந்த பெருமை திரு. பொன்னையா அவர்களையே சாரும். திரு. பொன்னையா அவர்கள் உடல் வைத்தியர்- உள்ள வைத்தியர் - உயிர் வைத்தியராக விளங்கினார்கள்

நல்ல பழைய பண்பாடுகள் கைநழுவிப்போகும் இக்காலத்தில் சில இடங்களில்

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்தின் பெருமை!

— செல்வன் பொ. சாம்பசிவம், மூளாய் —

முன்னொருகாலத்தில் இல்லறம் நல்லதோ? அல்லது துறவறம் நல்லதோ? என்று மூவர் நன்கு ஆராய்ந்து துறவறத்தில் புகுந்தனர். பின்பு காடுதனில் புகுந்து, மழைதனில் நனைந்து, வெயிலினில் உலர்ந்து. காய், கனி, கந்தமூலங்களை உண்டு அதையும் வெறுத்து பழுத்து விழுந்த சருகு சப்பியைப் புசித்து அதையும் வெறுத்து பிராணவாயுவே தஞ்சம் என்று உட்கொண்டு நிம்மதியாக இருந்து விடாமுயற்சியினால் இறைவனின் நாமமாகிய 'சிவாயநம' என்னும் நாமத்தை வாயினால் உச்சரித்துக்கொண்டு இருந்தார்கள் இப்படியிருக்கும் காலங்களில் இவர்களின் உணவு சித்தாமிர்தம்.

இவர்கள்மேல் இரக்கம் பூண்டவராகிய கைலயங்கிரிவாசன் இவர்களைப்பாதுகாப்பதற்காக புற்று வளர்க்க புற்றும் மேலாக வளர்ந்தது. அத்துடன் நகம்வளர, சடாமுடிவளர அவர்களின் தவமும் வளர்ந்துகொண்டே சென்றது அதையறிந்த கைலயங்கிரி வாசனாகிய சிவபெருமான் சக்தியை நோக்கிப் பார்க்க, சக்திசிவபெருமானை நோக்கிப் பார்க்க அவர்கள் சித்தம் இரங்கி இவர்களுக்கு விமோசனம் கொடுப்பதற்காக அடாத மழை, பேரிடி, புயற்காற்று அடித்து இவர்களின் புற்றைக்கரைக்கச் செய்தார்கள். இவர்கள் சக்தியற்று நின்று தள்ளாடும்போது புயல்காற்றினால் இவர்களுக்குக் கோல் கிடைக்கப்பெற்றது. இவர்கள் நாற்றிசையும் பார்க்க ஒரு திசையில் ஒருசிறு வெளிச்சம் காணப்பெற்று அத்திசையைநோக்கி ஒவ்வொருவராக சென்றடைந்தார்கள்.

முதல் சென்றவர் போய்ப் படுத்துவிட்டார். ஆனால் அங்கு ஒருவர் படுக்கக்கூடிய இடம்மட்டும்தான் இருந்தது. இரண்டாவது சென்றவர் இது யார்? ஐயா! எனக்கும் ஓர் இடம் அளிக்க வேண்டும் என்று கேட்க அதற்குமுதல் சென்றவர் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம் வாருங்கள் என்று அழைத்தார். பின்பு மூன்றாவதாகச் சென்றவர் எனக்கும் ஓர் இடம் அளிக்க வேண்டும் என்று கேட்க, அப்பொழுது முதற் சென்றவர் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் வாருங்கள் என்று அழைக்க அவரும் உள்ளே சென்று மூன்றுபேருமாக நின்றனர் பின்பு அவ்வறையிலிருந்த வெளிச்சம் அணைந்துவிட்டது அப்பொழுது அடாதமழை, பேரிடி, புயற்காற்று அடித்தது. இராக்காலம். அவ்விருட்டினிலே இறைவன் தானும் ஒருவராகச் சென்று எனக்கும் ஓர் இடம் அளிப்பீர்களா? என்று கேட்க முதல் சென்றவர் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம், நால்வர் நெருக்கலாம் வாருங்கள் என்று அன்புடன் அழைக்க அவரும் உள்ளே சென்று நெருக்கி நின்றார்கள்.

முதல் சென்றவர் நாலாவதாக வந்தவர் யாரென்று அறிவதற்கு பூமியே தகழியாக, கடல்நீரே நெய்யாக, தவப்பெருமை ஞானமே விளக்குத் திரியாக கொளுத்திப் பார்த்தபோது நான்காவது வந்தவர் கைலயங்கிரி வாசன் என்று ஆராய்ந்து அவர் பாதத்தை இறுகக் கட்டிப்பிடித்துக்கொண்டார். பின்பு இவர்களின் தவப்பெருமையினால் இறைவனும் இறைவியும் இடபவாகனரூபராய் காட்சி கொடுத்தனர்; தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்: பூதகணங்கள் புடைசூழ்ந்தனர் வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈகின்ற இறைவன் அம்மூவருக்கும் கேட்டவரங்களை ஈய்ந்து மறைந்தருளினார்.

## பல்சுவை

### இளமைக்கனவு

அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் புகையிரதம் ஓட்டும் சாரதியாக வரவேண்டும் என சிறுவயதில் விரும்பினாராம். அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றபின்னர் பேட்டியொன்றின்போது இத்தகவலை வெளியிட்டார். அவர் கூறியது இதுதான்: "புகையிரதம் ஓட்டும் சாரதியாக வரவேண்டுமென்று சிறுவனாக இருக்கையில் கனவுகண்டேன் எங்கள் கிராமத்தில் ஒரு நாளைக்கு ஒரு தடவை புகையிரதம்செல்லும். புகையிரதம் செல்லும் இடமெல்லாம் செல்லவேண்டும் என விரும்பினேன். இந்த ஆவல் புவியியல் சரித்திரம் ஆகிய பாடங்களைப் படிக்கத் தூண்டியது. இப்பாடங்களில் என் நாட்டம் சென்றமையினால், என்னளவு சிறைந்து அரசியலில் வேகம் அதிகரித்தது".

### ஐந்துமுட்டைகள்

விடுமுறைக்கு வீடு திரும்பிய மாணவன், தனது தந்தை சமையலறையில் மூன்று முட்டைகளைப் பொரித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்

"மகனே! பட்டணத்துப் பாடசாலையில் என்ன படிப்பித்தார்கள்?" என்றார் தந்தை

"விளங்கப்படுத்துகிறேன். உங்களுடைய பாத்திரத்தில் மூன்று முட்டைகள் அல்ல, ஐந்துமுட்டைகள் உண்டு என தர்க்கரீதியாக நிரூபிக்கிறேன். கவனமாகக்கேளுங்கள்! பாத்திரத்தில் மூன்று முட்டைகள்உள்ளன. ஆனால் மூன்றில் இரண்டும் அடங்கியுள்ளது. ஆகவே மூன்று முட்டைகளும் அதில் அடங்கியுள்ள இரண்டு முட்டைகளும் சேர்த்தால் ஐந்து ஆகும்" என்றான் மகன்.

"ஆஹா! மகா திறமைசாலி" என்று மகனைத்தட்டிக் கொடுத்த தந்தை, "அந்த ஐந்து முட்டைகளுள் நான் மூன்றைச் சாப்பிடுகிறேன். எஞ்சிய இரண்டையும் நீ சாப்பிடு" என்று அமைதியாகப் பதிலளித்தார். (சோவியத் நகைச்சுவை)

தொகுப்பு: அ.கனகசூரியர், ஊரெழு மேற்கு

## நமது டயறி

1 உலகத்திலே சிறந்த நாடக ஆசிரியர் மகாகவி ஷேக்ஸ்பியர்

2 உலகிலே மிகப் பெரிய அரண்மனை போப்பாண்டவர் இருக்கும் வத்திக்கான் அரண்மனையாகும்

3 உலகத்தின் முதல் விமானப்பெண்: செல்விபேல் பிங்கல்ஸ்டீன்

4 சுரங்கப் பொருட்களால் சிறப்புற்று விளங்குவது ஜேர்மனி

5 விநோதம் நிறைந்த கூடு அமைத்து வாழும் பறவை தூக்கணாங்குருவியாகும்

6 கோப்பி குடித்தலை முதலில் ஆரம்பித்தவர் அரேபியர்

7 பறக்கும் வெடிகுண்டு ஆளின்றித் தானே பறந்து செல்லக் கூடியது

8 மனித உழைப்பினால் செய்யப்பட்ட வடம் ஜப்பானில் உள்ளது

9 இலங்கையின் முதல் கவர்னர் ஜெனரல் (தேசாதிபதி) லோட் சோல்பரி பிரபு வாகும்

10 தமிழ்மறையெனப் போற்றப்படும் நூல் திருக்குறள்

அனுப்பியவர்:
செல்வி விஜயா சிவசம்பு
ஊர்காவற்றுறை

## உங்களுக்குத் தெரியுமா?

(1) உலக அதிபாரக் குத்துச் சண்டைவீரர் யார்?

(2) இலங்கைப் பிரதமர் சிங்கப்பூரில் வாங்கிய சரக்குக் கப்பலின் பெயர் யாது?

(3) கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சூட்டப்பட்ட புதிய பெயர் என்ன?

(4) கூம்பு வடிவமான அலகுடைய பறவை யாது.

(5) 1942-ம் ஆண்டு சிறையில் இருந்த மந்திரியின் பெயர் யாது?

(6) அமெரிக்காவின் வான்வெளி ஆராய்ச்சி நிலையம் எந்த இடத்தில் அமைந்துள்ளது?

(7) ஐக்கிய நாடுகள்சபையின் பதவி வகித்த முதல் பெண்மணி யார்?

(8) சேர் பொன். அருணாசலம் எங்கே, எப்போது இறந்தார்?

(9) எகிப்தில் அதிகம் விற்பனையாகும் தினசரிப்பத்திரிகை யாது?

(1) பிரேஸியர். (2) லங்காராணி. (3) பண்டாரநாயக்கா. சர்வதேச விமான நிலையம். (4) அடைக்கலான் குருவி. (5) டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா. (6) கேப் கென்னடி முனையில் உள்ளது (7) ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட். (8) மதுரையில் 1924-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி மரணமானார். (9) அல்-அஹ்ரம் பத்திரிகை.

## வண்டி

— பி. மகாலிங்கம் —

நாலு சக்கர வண்டி
நகரில் செல்லும் வண்டி
வெள்ளை நிற வண்டி
வேகமாய்ச் செல்லும் வண்டி

சாரதி ஓட்டும் வண்டி
சட்டென நகரும் வண்டி
புகையைக் கக்கும் வண்டி
புழுதியைக் கிளப்பும் வண்டி


மலையைக் கடக்கும் வண்டி
மையிருட்டில் செல்லும் வண்டி
தொலைதூரம் சென்று பின்னர்
தரையில் திற்கும் வண்டி.

# இயந்திர ஆசிரியர்!

சோவியத் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிப்பதற்குப் பல இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அண்மையில் கீழ் உயர்கர வானொலி தொழில் நுணுக்கப் பள்ளியினர் ஒரு புதிய இயந்திர ஆசிரியரை உருவாக்கியுள்ளனர். இந்த ஆசிரியரை எளிதாக ஏமாற்றி விட முடியாது.

அன்றுடைப் பாடங்கள் ஒரு காந்தச் சுருளில் எழுதப்பட்டு இந்த இயந்திரத்துக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாடத்தை ஒலிபரப்பியோ அல்லது (இயர் போனின்" மூலமாகவோ அந்த இயந்திரம் கற்பிக்கின்றது. அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு திரையில் அப்பாடத்திற்கு வேண்டிய புகைப்படங்கள் வரைபடங்கள் முதலியவை தோன்றுகின்றன. பாடம் சொல்லிக்கொண்டிருக்கும்போதே இயந்திரம் மாணவர்களைக் கேள்வி கேட்கின்றது. இதற்குச் சரியான விடையை மாணவன் தனக்குப் பக்கத்திலுள்ள ஒலிபெருக்கி 'மைக்' கில் சொல்லவேண்டும் எது சரியான விடையென்பதும் இயந்திரத்துக்குத் தெரியும்.

மாணவன் கூறும் விடை சரியான விடையாகவிருந்தால் உனது விடை சரியானது என்று மாணவனிடம் கூறுகின்றது விடை தவறாக இருந்தால் உனது விடை தவறானது என்ற சொற்கள் திரையிற் தோன்றுகின்றன மாணவன் தக்க விடை கூறும்வரை இயந்திரம் காத்திருக்கின்றது மாணவனுக்கு சரியான விடை தெரியவில்லையென்றாலும் இயந்திரம் உடனே விடை கூறுமல் மாணவன் தன் பாடத்திருந்தப் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் மேலும் பல கேள்விகளைக் கேட்கின்றது இதன் பிறகும் மாணவனால் சரியாக விடை கூறமுடியவிட்டால்! இயந்திரம் எத்தனை கேள்விகளைக் கேட்டது அவன் அதற்கு கூறிய தவறான விடைகள் எத்தனை என்பதற்கான கணக்கை வைத்து மாணவனுக்கு மதிப்பெண்களைக் குறித்து விடுகின்றது




## வேட்டுவர்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தேவவழிபாடுகள்! இன்றைய நான்சமுதாயத்திற்குரிய சமய வழிபாடுகளோ, குரவர்களோ ஞானவிஞ்ஞானமோ பழங்குடிகளுக்கு இருந்ததில்லை. வீடுபேறெனப் பொருளுற (அறம் பொருள், இன்பம், வீடு) முதலியவைகளுக்கு அவருளம் வெவ்வேறு பாகவழிபாடும், கிராமதேவதையாராதனையும் இறந்துபட்ட பெரியோரினதும் திடீரென உயிர்நீத்தவரினதும் ஆன்மாக்களுக்கு அமைதி விளைவிக்க ஆடு, கோழி முதலிய உயிர்களைப் பலியிடுவதும் முதன்மை பெற்றன. தமது வாழ்வில் ஏற்படும் நோய் முதலிய இன்னல் இந்த பசாசங்கள் தேவதைகள், திருப்தியடையாத ஆன்மாக்கள் ஆகியவர்களின் கோபத்தால் ஏற்பட்டனவாகக் கருதி அவர்களைத் தணிப்பதன் பொருட்டுப் பலிபூசைகளை நடாத்தினர்.

பழந்தமிழரிடையில் சாத்தன் அன்றேல் ஐயனார் கிராமதேவதைகளின் முதல்வர். இப்பவும் பலவிடங்களில் ஐயனார் கோயில்கள் காணப்படுகின்றன. இக்கோயில்களின் முன்பாகக் காணப்படும் யானை குதிரை ஆகியவற்றின் உருவங்கள் தேவைகளுக்காக நிலைபடுத்தப்பட்ட வாகனங்களாயின. தீயபசாசங்களைத் தோற்கடித்து ஊர்மக்களைக் காப்பாற்ற இவ்வாகனங்களின்மீது இத்தெய்வங்கள் ஊர்ந்து கிராமப் பகுதிகளில் உலாவுகின்றனவென மக்கள் நம்பினர். தமிழகத்தில் மட்டுமன்றி சிங்களக் கிராமங்களிலும் ஐயனார், காளி அம்மன் வழிபாடு பண்டையநாளிற்போல இன்றும் உண்டு.

வேடுவர் வழிபடுகின்ற தேவதைகள் பலர். கலே தெவியோ, பண்டார தெவியோ, அளுத்தெவியோ அவருள் சிலராவர். பஞ்சம் போன்ற இயற்கை நெருக்கடி அல்லது அம்மைபோன்ற தொற்றுநோய் ஏற்பட்டால் வேடுவத்தலைவர்கள் மந்திரவித்தை பழகியவரைக் கொண்டு ஒரு பலிபூசை அல்லது யாகம் நடப்பிக்கிறார்கள். வாழையிலை கொடி முதலியவற்றால் ஒரு பந்தல் அமைத்து பஞ்சவர்ண பூக்கள். தூபம், விளக்கு கோழி ஆகியவை சேர்த்து தெய்வத்தைநோக்கி ஆடுதலும் பாடுதலும் செய்து அர்ச்சனை பண்ணுகிறார்கள்.

மஹியங்கனை புத்தகோயிலில் வருடந்தோறும் நடைபெறும் விழாவில் அவர்கள் ஊர்வலத்தில் மாத்திரம் கலந்துகொள்வார்கள். ஆதிவேடுவர்போல் கச்சின்மேல் இலையும்குழையுமாக உடைத்து 'மேழகக்குரல்' போலும் குரலினால் பொருளற்ற பாடல்பாடி ஆவேசம்கொண்டவர்போல் ஆடித்திரிகிறார்கள். பிரார்த்தனை முதலிய சமயவழிபாட்டில் ஈடுபடமாட்டார். அவர்களின் இத்தாழ்ந்த நிலைமையையும் அறியாமையையும் போக்கவென்ற ஒருவர் 1896-ம் ஆண்டளவில் கண்டி திரிவிட்டி கல்லூரி அதிபராக இருந்த ஆங்கிலேயப் பாதிரியார் அவர். இன்னொரு ஆங்கிலேயருடன் வேடுவரின் முன்னேற்றத்தைநிலை நிறுத்துதற்காக புத்தி கூர்மையுள்ளவொருவேடுவச் சிறுவனைத்தேடி விந்தனை வனப்பகுதியைச்சேர்ந்தார் சமய உணர்வும் கலையறிவும் கொடுத்து அவனை ஒருபோதகராக வேடர்மத்தியில் அனுப்பி மதப்பிரசாரம் செய்வதுதான் அவரின் முதல் நோக்கமாயிருந்தது. தம் எண்ணம்போல ஒரு கெட்டிக்காரச் சிறுவனைத் தேர்ந்தெடுக்க நேர்ந்தது. அங்கிருந்து ஊரணி — மஹியங்கனைப் பாதை வழியாக கண்டிக்குத் திரும்பவும்புறப்பட்டார் துரதிர்ஷ்டவசமாக ஒரு காட்டுயானை திடீரெனத் தோன்றி அவரைத் தாக்கவே பெரியோரிருவரும் தடுங்கி கனவிற்போல மயங்கிமரத்திலேறிக்கொண்டனராம். பையன் தன் ஊரைநோக்கி ஓட்டம்பிடித்தானாம். தோட்டாப்போடப்பட்ட நண்பரின் கைத்துப்பாக்கியின் விசை தற்செயலாகத் தட்டுப்படவே சுவாமியவர்கள் உயிரற்ற சடலமாக மரத்தடியில் விழுந்தனராம். அவர் ஞாபகச்சின்னமாக கல்லூரி மாணவர்களால் எடுப்பிக்கப்பட்டதொரு தூண் வீதியருகில் உண்டு. இச்சம்பவம் தாம் காப்பாற்றும் காட்டுக் கடவுளர் சீற்றத்தாலே நிகழ்ந்த விபத்தென்பது வேடுவரின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகள் இந்திராவின் சிறைவாசம்

தேனிலவைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு பிரோஸும் இந்திராவும் லக்னோ திரும்பினர். லக்னோவில் இருவரும்புதுக்குடித்தனம் நடாத்த ஆரம்பித்தனர். பிரோஸ் 'நஷனல் ஹரோல்ட்' என்ற பத்திரிகையின் மனேஜர் ஆனார். வீட்டைச் சீராக வைத்திருந்த இந்திரா நாட்டையும் சீராக்குவதற்குத் தான் உழைக்கவேண்டும் என நினைத்தாள்.

இந்திரா காங்கிரஸின் பெண்கள் பகுதியைக் கவனித்துக்கொண்டாள். சமூக சங்கங்களிலும் அக்கறை கொண்டு அவற்றின் சேவை செவ்வனே நடைபெற உத

**இந்திரா வாழ்வில் ... 8**

வினாள். திருமணத்தின்பின் மீண்டும் இந்திரா நாட்டுநலனில் அக்கறை காட்டவே அவளது சிறிய இல்லம் காங்கிரஸ் பெண்தொண்டரின் ஆலோசனை மண்டபமாகியது.

கல்லூரி மாணவிகள், ஆசிரியைகள், சமூக சேவகிகள் எனப் பலதிறத்தவர் இந்திராவை நாடிவந்து ஆலோசனை கேட்டனர். தம் பிரச்னைகளைக்கூறி அவருதவியோடு அவற்றிற்குத் தீர்வு காணவிழைந்தனர். இதற்கிடையில் நாட்டின் விடுதலைக்காக வெளியில் நடைபெறும் சகல இயக்கங்களிலும் இந்திரா களைப்பின்றிப் பங்குபற்றினாள்.

### கணவர் தலைமறைவு

"வெள்ளையனே வெளியேறு" இயக்கம் தீவிரமாகப் பம்பாயில் நடைபெற்றது. இந்திராவும் பிரோஸும் இவ்வியக்கத்தில் கலந்துகொண்டனர். அத்தைவிஜயலட்சுமியும், தந்தையும் கைது செய்யப்பட்டார், சிறைக்குச் செல்லவிரும்பாத பிரோஸ் தலைமறைவானார்.

## இன்பம் தவழ வேண்டிய வாழ்வில்

## பொலிஸ் தடியடியும், சிறை வாசமும்

## தலை மறைவும்

இந்திரா தனித்துவிடப்பட்டாள். மணமாகி ஒரு சில மாதங்கள் இந்திரா கணவனைப் பிரிந்து வாழ

கே. ஜி.

வேண்டிய நிலை ஏற்பட்டது. கணவர் எங்கு போனார், எப்படி இருக்கிறார் என்ற விடயங்களேஇந்திராவுக்குத் தெரியாது. லக்னோவுக்கு வந்து ஒரு சில தினங்களுக்குப் பின்னர் இந்திரா கணவனைச் சந்திக்கவேயில்லை. நாட்டின் நலனுக்காக இத்தியாகத் தம்பதிகள் தங்களை மறந்து தம் நலனை மறந்து செயல்பட்டனர் என்றால் நாட்டிற்கு அவர்களது சேவை எத்தகையதென்பது சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. ஆகஸ்ட் போராட்டத்தில் தீவிர பங்குகொண்ட பிரோஸை பொலிசார் தேடித்திரிந்தனர். ஆனால் அவர் அகப்படுவதாக இல்லை.



### பொலிசாரின் தாக்குதல்

ஒரு நாள் ஈவிங் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் தேசியக் கொடியேற்று விழாவைக் கொண்டாடினார்கள். அதற்கு இந்திராவைத் தலைமை தாங்க அழைத்தனர். கைது செய்யப்படுவதற்கு எந்நேரமும் தயாராக இருந்த இந்திரா இவ்விழாவில் பயமின்றிக் கலந்துகொண்டாள். இவ்விழாவில் தேசியக் கொடியைப் பிடித்துக்கொண்டு நின்ற மாணவனைப் பொலிசார் திடீரெனத் தாக்க ஆரம்பித்தனர். அம்மாணவனோ கொடியைத்தாழ்த்தியதாக வில்லை. தனது உடல்வலியையும் பொருட்படுத்தாது கொடியை இறுக்கிப் பிடித்துக்கொண்டான். இறுதியில் அவனது கை தளர்ந்தது. இந்த நிலையில் இந்திரா விரைந்து சென்று அக்கொடியைத் தான் தூக்கிப் பிடித்தாள். பிடித்தமாத்திரத்திலேயே அவளின் முதுகைக் குண்டாந்தடி பதம் பார்த்தது. எதிர்பாராமல் கிடைத்த இந்த அடியை இந்திராவால் பொறுக்க முடியவில்லை எனினும் அவள் கொடியைப் பிடித்த தன் கையை விடவேயில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் வெறுக்கத்தக்க சின்னமாக குழந்தைப் பருவத்திலிருந்தே இந்திராவால் கருதப்பட்டு வந்த பொலிசார் மேலும் அவளைத் தாக்கவே மயக்கமுற்றாள்.

இதைக் கேள்வியுற்ற பிரோஸ் அன்று இரவு இந்திராவை இரகசியமாகச் சந்தித்து அன்றைய நிலைமையை விசாரித்தார். இந்திரா கணவன் மனதைக் கலங்கவைக்கக்கூடாதுஎன்ற நோக்குடன் 'சிறு தகராறு' தான் எனக் கூறி அவரைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

### சிறைத்தண்டனை

இச் சம்பவம் நடைபெற்றுச் சில நாட்களுக்குப் பின்னர் ஒரு பொதுக்கூட்டத்தில் இந்திரா உரையாற்றினாள். பிரிட்டிஷ் இராணுவ வீரர்கள் இக்கூட்டத்தில் பேசப்படுவதைக் கவனிக்க அங்கு நின்றார்கள். இந்திரா போராட்டம்பற்றி உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள். 5 நிமிடம்தான் பேசியிருப்பாள். துப்பாக்கி வீரர்கள் அவளை நெருங்கிவிட்டனர். 'பேச்சை நிறுத்து. சுட்டுவிடுவேன்' என்றான் ஒரு துப்பாக்கி வீரன். இக்கூட்டத்தில் மறைவாக இருந்து யாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த பிரோஸ் பாய்ந்தோடி வந்தார். இராணுவ வீரருடன் போராடினார். இறுதியில் இருவரையும் இராணுவ வீரர்கள் கைதுசெய்தனர். அக்கூட்டத்தில் மேலும் பலர் கைதுசெய்யப்பட்டனர். யாவருக்கும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

முதல்முறையாகச் சிறைத் தண்டனையை இந்திரா அனுபவித்தாளானாலும் அக்கஷ்டங்களை அவள் துணிவுடனும் பொறுமையுடனும் தாங்கிக்கொண்டாள். சிறைக்கொடுமைகளை மலர்ந்த முகத்துடன் அனுபவித்தாளானாலும் அதே சிறையில் வேறு அறையில் அடைக்கப்பட்டிருந்த பிரோஸை நினைத்து வருந்தினாள் இந்திரா இத்தனை அருகாமையில் இருந்தும் ஒருவரை ஒருவர் காணவியலாதிருப்பதை நினைக்கும்போது அவளுக்கு இதயமே வெடித்துவிடும்போல் இருந்தது.

சிறைக்கைதிகள் 'ஏ. பி. சி' என பிரிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு ஓரளவு வசதி சிறையில் அளிக்கப்பட்டிருந்தது இந்திராவின் கார்ட்டில் 'எக்ஸ்' எனக் குறிப்பிட்டிருந்தது. அதாவது ஆயுட் தண்டனைக்குரிய கைதிகளின் கஷ்டங்களை இவள் அனுபவிக்கவேண்டும். இத்தகைய ஒரு கொடுமையான தண்டனையை அவள் ஒருபொழுதும் அனுபவித்ததில்லை இந்திராவை ஒரு 'பயங்கரவாதி' என்றே சிறையதிகாரிகள் நினைத்தனர் இதனால் அவளுக்கு மற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட எந்த வசதிகளும் அளிக்கப்படவில்லை எனினும் இந்திரா அதைப்பொருட்படுத்தவில்லை. அங்கிருந்துகொண்டே தன்னுடன் உள்ளவர்களுக்கு நல்ல பாடங்களைச் சொல்லிக்கொடுத்து அவர்களது அறிவை வளர்த்துக்கொண்டிருந்தாள். இவ்வேளையில் அவளது சிறைத் தண்டனைக் காலம் முடிவுற்றது. 1943-ம் ஆண்டு மே மாதம் 9 மாதச் சிறைத் தண்டனையை அனுபவித்த பின்னர் சிறையிலிருந்து விடுதலைபெற்றாள் இந்திரா.

(வளரும்)

### நினைவில் நிறுத்த...

**எல்லாம் உன்கையில்**

இல்வாழ்வை வளம் பெறச்செய்வதும், தாங்க முடியாத துன்பச் சுமையாகச் செய்து விடுவதும், குடும்பப் பெண்ணின் கையில் இருக்கிறது. தன் கடமையை உணர்ந்து அவள் செயல்பட்டால் வாழ்வு சிறக்கும். இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை'

0 0 0

**எச்சரிக்கையாக வாழுங்கள்**

உங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாக வாழவேண்டுமென்று நினைத்தால், நீங்கள் ஓர் உதாரணமாக வாழவேண்டியது இல்லை; எச்சரிக்கையாக வாழ்ந்தாலே போதும்.

0 0 0

**வாழ்க்கை மோசமானதா?**

வாழவே முடியாது என்று பலர் நினைப்பது போல் வாழ்க்கை அத்தனை மோசமானதல்ல வாழ்வதே இன்பம் என்று சிலர் நினைப்பது போல் அத்தனை சுலபமானதல்ல

**மனிதனின் மூலதனம்**

அன்பு கனிந்த மனைவியும், திடமான ஆரோக்கியமுமே ஒருமனிதனுக்கு மிகச் சிறந்த மூலதனம்.

# நோய் பரவாது தடுக்கும் வழி!

டாக்டர் து சுப்பராயன்

'நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம்'-நோய் வராமல் தடுப்பதும் நோயைக் குணப்படுத்துவதும் டாக்டரின் கடமை எனச் சிலர் கருகின்றனர். வீட்டிலுள்ள பெண்கள் எவ்வளவுக்கெவ்வளவு கவனம் எடுக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நோயைத் தடுத்து இன்பமாக வாழலாம்.

### உணவுப்பாதுகாப்பு

ஈக்களினால் டைபோயிடு, பேதி, சீதபேதி, காலரா போன்ற வியாதிகள் பரவுகின்றன. இந்தச் சிறிய ஈக்கள் செய்யும் பெரிய தீங்கை நாம் நீக்கலாமல்லவா. ஈக்களை உணவுப்பண்டங்கள் மீது உட்காராமல் தடுத்துவிட்டால் வியாதிகள் பரவமாட்டா. ஒவ்வொருவரும் சாப்பிடும்பொழுது உணவின் மேல் ஈக்கள் உட்காராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஈக்களினால் மொய்க்கப்பட்ட பண்டங்களை உண்ணக்கூடாது.

ஈக்களும் கொசுக்களும் உற்பத்தியாகாமல் தடுத்து விட்டாலும் இந்த வியாதிகள் பரவுவதைத் தடுத்து விடலாம். வீட்டின் சுற்றுப்புறங்களில் அழுக்குநீர் தேங்கி நிற்காது கவனித்துக் கொள்வதோடு சுற்றுப்புறங்களை எந்நேரமும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். இவை பிறக்கவும் வாழவும் வளரவும் வசதியில்லாமல் நாம் செய்துவிட்டால் மேற்படி நோய்களிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

இவற்றை நடைமுறையிற் கொண்டுவரப்பட்டால் ஈக்களும் கொசுக்களும் உற்பத்தியாவதையும், வளருவதையும் தடுத்து அவற்றால் பரப்பப்படும் வியாதிகளைத் தடுத்துவிடமுடியும் கடைத்தெருவிலும் உணவுச் சிற்றுண்டிச்சாலைகளிலும் பழங்களும் உணவுப் பொருட்களும் பாதுகாக்கப்பட்டு விற்கப்படவேண்டும், இவற்றின் மேல் ஈக்களும் உட்காராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.




தயாரிப்பு: குணம்

# தேன் எனும் நல் மருந்து..

— கி. சுப்பிரமணியம் —

உடல்நலக்குறைவான குழந்தைகளுக்கு தேனைக் கொடுப்பதால் உடல்நலம் நன்குவிருத்தியடைவதுடன் இரத்தவளம், எடை, வலிமை, பொதுத்தோற்றம் ஆகிய எல்லாவற்றிலும் சிறந்துவிளங்கவும் வாய்ப்பு உண்டாகிறது.

பல்வேறு சர்க்கரைகளிலும் பார்க்க தேனே விரைவில் செரிக்கப்படும் உணவாகும். இதனை அருந்துவதினால் வயிற்றுப்போக்கு நோய் குழந்தைகட்கு வருவதில்லை. மற்றையசர்க்கரைகள் வயிற்றில் எரிச்சலையும் வயிற்றுப்போக்கையும் ஏற்படுத்தவல்லன. தேன் இன்னொருவிதத்தில் மலச்சிக்கலைத் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. குழந்தைகள் தொடர்ந்து தேனைச்சாப்பிடின் அவர்களின் உடலில் இருக்கும் கல்சியத்தினதும் மக்னீசியத்தினதும் அளவு அதிகமாகும். வளம்குன்றிச் சோர்ந்து சருகுபோல் தோற்றமளித்து இறந்துபோகும் என்று கருதப்பட்ட குழந்தைகட்கும் பாலும் தேனும் கொடுப்பின் நிறைவான நலம்பெற முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பலவிதமான காய்கறிகள் பழங்களோடு தேனும் அருந்தி அவை உயிர் மீண்டதோடு மற்றக்குழந்தைகட்கு இணையாகவும் உயிர்வாழ்ந்தன.

தாய்ப்பாலைவிடச் சிறந்த உணவு குழந்தைகளுக்கு வேறு எதுவும் இருக்கமுடியாது. தாய்ப்பாலற்ற குழந்தைகளுக்குப்பால் கொடுக்கும்போது 15 அவுன்சுபாலுடன் 10 அவுன்சு நீர் கலந்து கூடவே 3 அல்லது 4 தேக்கரண்டி தேனையும் சேர்த்துக் கொடுக்கலாம். ஆனால் குழந்தையின் வயது ஏற ஏறப் பாலின் அளவை அதிகமாக்கித் தேனை 3 கரண்டியுடன் நிறுத்துவது நல்லது. ஏனெனில் குழந்தையின் வயிறு கொஞ்சமான அளவிலும் நலமாகவே இருக்கும். தவிர அதிகமாகத் தேனைத் தருவது மலத்தை இளக்கும். ஆகவே கொஞ்சம் குறைக்க வேண்டும்.

கொதிக்க வைத்த பாலையும் நீரையும் சரிசமமாக எடுத்துக்கொண்டு அவற்றுடன் 7 சதவீதம்தேனையும் கலந்தால் அதுவே குழந்தைகளுக்கு மிகவும் சிறந்த உணவாக இருக்கும் என்று டாக்டர் ஜான்சன் என்பவர் கூறுகிறார். குழந்தைகளுக்கு சீனி இலகுவில் செரிக்க முடியாது. சீனியை இரத்தத்துடன் கலக்கும் பொருளாக மாற்றுவதற்குத் [illegible] யான என்சைம்கள் [illegible] களிடம் போதுமான அளவில்லை.

சீனி போன்ற பல்வேறு சர்க்கரை வகைகளை உண்ணும் குழந்தைகள் ஊட்டம் குறைந்து, அமைதியற்று, எளிதில் உணர்ச்சிவசப்பட்டு, முகத்தில் பொலிவு குன்றி உறக்கத்திலேயே சிறுநீர் கழித்தல் போன்றவற்றுக்கு உள்ளாகிறார்கள் என டாக்டர் டிக்ஸ் கூறுகிறார். இவைதவிர அழுகிய பற்கள், மலச்சிக்கலின் தொல்லை, அடிக்கடி ஏற்படும் வயிற்றுப்போக்கு என்பவற்றுக்குள்ளாகி இவைகளால் பின் முடக்குவாதம், தொண்டை அழற்சி, மூக்குக் குழல் அழற்சி எனும் பல நோய்களுக்கும்இரையாகின்றனர். சிறுகுடலிலும், இரைப்பையிலும் வாயுக்களின் தொல்லைக்குள்ளாகின்றனர். சொறிசிரங்குடன், ஓயாது உண்டும் ஒழியாத பசி தீராததுன்பம் என்பன உண்டாகின்றன. இவற்றிலிருந்துசுகம்பெற தேனை அருந்துதல் நன்று. குழந்தைகளுக்கு மட்டுமன்றி வயதுவந்தவர்களுக்கும் [illegible] வல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவின் இரண்டாவது மிகப் பெரிய கப்பல் கட்டும் தளம் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசிலுள்ள பிரெமனில் அமைக்கப்படுகிறது. இதில் 250,000 தொன்வரை எடைகொள்ளக் கூடிய கப்பல்களை நிர்மாணிக்கக் கூடியதாக இருக்கும். இங்கு இதுவரை 80,000 தொன் எடைகொள்ளக்கூடிய கப்பல்களை மட்டுமே நிர்மாணிக்க முடிந்தது. புதிய தளத்தைக்கட்டிமுடிக்க ஏழுகோடி மார்க்குகள் செலவாகும். ரொட்டர்டாமிலுள்ள கப்பல் கட்டும் தளமே ஐரோப்பாவில் மிகப் பெரியதாக விளங்குகிறது.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மனித தருமத்துக்கொவ்வாத சில மூடக்கொள்கைகளைச் சில மக்கள் குரங்குப்பிடியாகப் பிடித்திருக்கிறார்கள். அதற்கும் ஏழாலை ஒரு சாட்சியாக விளங்குகின்றது.

## வேள்வி வழக்கம்

நான்கு ஐந்து தலைமுறைகளுக்கு முன் ஊரில் பெரிய ஒரு கொள்ளை நோய் ஏற்பட்டது. அதனால் பல குடும்பங்கள் முற்றாகவே அழிந்தொழிந்துபோயின. ஏதோ தேவசாபம் என்று நினைத்து அவ்வூர் மக்கள் இலந்தைகட்டி என்ற குறிச்சியிலுள்ள வைரவர் கோவிலில் பெரிய ஒரு வேள்வி நடத்தினார்கள். அவ்வேள்வி மிகப் பெரியது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வேப்பமரங்கள் முதலாகப் பலவகை மரங்கள் கோயில் முன்றிலுக்கு வந்துசேர்ந்தன யாக முடிவில் ஆட்டுக்கடா ஒன்றும் சேவல்ஒன்றும் பலிகொடுக்கப்பட்டது. யாகத்தை நடத்தியவர்கள் பலிகொடுத்த இருபிராணிகளையும்கொழுந்துவிட்டெரிந்த அக்கினியிலேயே போட்டார்கள்.

# நீர்வளமும் . .

அந்த ஞாபகார்த்தம் தற்போது ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டுவருகின்றது. வேள்வி செய்வாரில்லை; ஆடு- கோழிகளைப்பலி கொடுப்பது மாத்திரம் தவறாது நடைபெற்று வருகின்றது. இம்மூடக் கொள்கையை நிறுத்த வேண்டுமென்று பல பெரியார்கள் முயன்றனர். அவர்கள் முயற்சி வீண்போகவில்லை. கோயில் சூழலிலுள்ள பலர் பலி கொடுப்பதை நிறுத்தியுள்ளார்கள். வாலிபர் பலர் முன்வந்து இந்த ஆண்டிலாவது அதனை முற்றாக நிறுத்தவேண்டுமென்று முயற்சிகள் செய்கின்றனர். அவர்கள் முயற்சி வெற்றி அடையவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கடந்த 12 ஆண்டுகளாக இக்கோயிலில் இருந்து பஜனைக் கோஷ்டியொன்று நல்லூர் தேர்த்திருவிழா அன்று நல்லூருக்குப் பஜனைப் பாதயாத்திரை செய்து வருகின்றது. புறப்படும்போது நூற்றுக்கணக்கானவர்கள் மாத்திரம் எனினும் கோயில் சேரும்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடிவிடுகின்றனர்.

கோயிலோடு சம்பந்தமான பெயரைப் பெற்றமையினாலோ ஏழாலை சிறந்து விளங்குவது போல பக்தி உள்ள பூண்டமையினாலே அங்குள்ள மக்களும் பண்பாட்டுடன் விளங்குகின்றார்கள்.

## பிரயாணி....

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

அவனையும் அனாதையாக்கிவிட்ட விந்தை சோமுவின் மனத்தினுள்ளே பெரியதொரு தாக்கத்தை உண்டு பண்ணிற்று.

இந்த வேதனையில் அவன் தன்னை நடராசாவினிடத்திலும், இறந்துவிட்ட தன் தாயை நடராசாவின் தாயிடத்திலும் வைத்துப் பார்த்தான்.

'அம்மா என்றால் என்னை அகதியாக்கி இவர்கள் இங்கே வைத்திருக்கச் சம்மதித்திருப்பாளா? அப்படித்தான் சம்மதித்தாலும் கூட, என்னை வந்து அடிக்கடி பார்க்காமலிருப்பாளா? நான்தான் இப்படி அம்மாவைப் பார்க்காமல் இந்த மறியல்வீட்டில் அடைபட்டுக்கிடப்பேனா?'

நடராசாவாகி நின்ற அவன், முன்னால் குந்தியிருந்த நடராசாவை ஒரு முறை பார்க்கிறான்.

'இந்த வருத்தம் மாற என்ன வழி? அம்மாவும் நானுமாயிருந்தால், ஒன்றுயிருக்கிறதுதான் சரியான மருந்தென்று பட்டினி கிடந்தாலும் ஒரேயிடமாய் இருந்திருப்போம். இந்த நடராசாவும் தாயும் ஏன் இப்படிப் பிரிந்திருக்கிறார்கள்?'

மறுபடியும் சோமு திரும்பி, நடராசாவைப் பார்க்கிறான்.

'பாவம், இவனை எப்படிச் சமாதானப்படுத்துகிறது? அம்மாவைப் பார்க்கிற ஆசை இருக்க இருக்க வளர்ந்துகொண்டேபோகுமே- என்னால் இவனைக் கூட்டிக்கொண்டு அங்கேயும் போக முடியாது, தாயைக் கூட்டிக்கொண்டு இங்கேயும் வர முடியாது.'

வேதனையில் தோய்ந்து, அழுகையில் பொருமியிருந்த நடராசாவின் முகம் சோமுவினுள்ளே சிந்தனையைத் தேக்கி அவனை இன்னும் வளர்ந்தவனாக்கி நின்றது.

'ரெண்டு நாளைக்கு மனதையடக்கிக்கொண்டு பேசாமலிரு; அம்மா வந்தாச் சரி, இல்லையெண்டா நான் ஒரு வழி செய்கிறேன்.'


என்ன வழி என்று அவனுக்கே தெரியாது. ஆனாலும் அவனது இந்த வார்த்தைகள் அவனுள்ளே ஒரு தைரியத்தை ஏற்படுத்த அதன் பிரதிபலிப்பாய் நடராசாவின் முகத்திலும் சிறிது தெளிவு தென்பட்டது. இந்த முடிவு இருவரிடையேயும் ஏற்பட்டிருந்த பாசத்தை மேலும் இறுகச் செய்தது.

இதற்காகவே பொறுத்திருந்தவர்போல, உதவியாசிரியர் ஒருவர் வெளியேவந்து உரத்துச் சத்தமிட்டார்.

"புல்லோ பூண்டோ ஒரு துரும்போ நிலத்திலில்லாமல், சுத்தமாக்கி, பிடுங்கினதையெல்லாம் அந்தக் கிடங்கினுள் போடுங்கள்."

(வளரும்)


## ஆரம்ப வாழ்வு ஆரோக்கிய வாழ்வாவது முக்கியம்





இன்றைய குழந்தைகளுக்காக விசேஷமாகத் தயாரிக்கப்படுவதும் முக்கியமாக உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகளுக்காக தயாரிக்கப்படும் நவீன பாலுணவுதான் பெலார்கன்
நன்கு சமன் படுத்தப்பட்டது, ஜீரணிக்கக் கூடியது. அதிகப்படியான வைடமின்கள் கொண்டதுமான பெலார்கன் குழந்தைக்கு முக்கியமான ஆரோக்கிய வாழ்வை ஆரம்பத்திலேயே கொடுக்கும். பிறந்த நாள் முதல் திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளர உதவுவதுடன் குழந்தைக்கு தொற்று நோய் பீடிக்காமலும் பாதுகாக்கிறது பெலார்கன். அதனால்தான் பெலார்கன் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக விளங்குகிறது.

# பெலார்கன்

ஆரோக்கியமான குழந்தைகளை மேலும் ஆரோக்கியமாக்குகிறது.

தரச்சிறப்பிற்கும் NESTLÉ பாதுகாப்பிற்கும்

ZENITH




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா-குமாரி சச்சு
நடித்த
நிறைகுடம்


# வரி விளம்பரம்

## வாடகைக்கு

அறைகள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி, பாடசாலைகள், பஸ், புகையிரத நிலையங்களுக்கு அண்மையில் அறைகள் சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு எழுதவும். விளம்பர இல. 3222 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3222

## தேவை

லிகிதர் / ஆங்கில தட்டெழுத்து அடிப்பவர் (Clerk / Typist) தேவை 5-7-71க்கு முன் பிரதி நற்சான்றுப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் கௌரவ காரியதரிசி, மலாய இலங்கையர் சங்கம், 54, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3215

40 வயதிற்கு மேற்பட்ட குடிவெறி இல்லாத சாந்த குணம் உள்ள றைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். லிங்கம் அன் கோ 21/4, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 3209

## தேவை

சாரதி

லொக்சால் லைவேன் மோட்டோர் வாகனத்தில் வேலைக்கு சாரதி தேவை விண்ணப்பிக்குக பிரான்சிஸ் ஜோக்கிம், "மதுவை" பண்டத்தரிப்பு. 3231

சேற், கிறில், ஜம்ளாலை, வெல்டிங் வேலைகளுக்கு ஆட்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் 1-7-71ல் நேரில்சமூகமளிக்கவும். லங்கா றேடிங் அயன் வேர்க்ஸ், 31, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3223

## விற்பனைக்கு

கொந்தளை பிரதானவீதியில் நீர்கொழும்பிற்குத் திரும்பும் பிரதானவீதி சந்தியில் இருந்து 1/4 மைல் தூரத்தில் 20 குளி வீடு கட்டுவதற்குரிய காணி விற்பனைக்குண்டு. குளி ஒன்று ரூபா 1000/- விபரங்களுக்கு ஆர். பெரேரு, 95/2. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3233

**FOR SALE**

Table Tennis Table for Sale. Dr. K. A. Sathiyamoorthy. No. 1. Martyn Road, Jaffna. 3232

## விற்பனைக்கு

2 ஏக்கர் நெற்காணி செம்மடிய குறிச்சி பூநகரியில் விநிக்கும் ஐந்து பிரதான ஸ்தாபனங்களுக்கும் அருகில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். மு. செல்லையா, 18/3. சுவாமியார் வீதி, கொழும்புத்துறை 3208

காணி:

நீர்வேலி அரசவீதிக்கு அண்மையில் (கிளான்) 15 பரப்பு பயன்படுத்தப்படாத காணி விற்பனைக்குண்டு. V. யோகலிங்கம், கச்சாய்வீதி, சாவகச்சேரி. 2500

# வெளியீட்டு...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

என்னே இதிலொன்றும்கேலம் இல்லை.

ஈழத்திலே நூல்கள் தோன்றுகின்ற வேகமும் அவற்றின் விற்பனையும் முன்போலன்றி இப்பொழுது வரவர மகிழ்ச்சி தரக்கூடிய அளவுக்கு வளர்ந்து வருகிறது. எழுத்தாளனை எழுத்தாளன்தான் தெரிந்து கொண்டிருந்த காலம்மாறி அவனுக்குப் பல வாசகர்களும் தோன்றியிருக்கிறார்கள். இந்த நல்ல மாற்றத்துக்கு வெளியீட்டு விழாக்களும் ஓரளவு காரணம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

வெளியீட்டு விழாக்களை ஏதோ சமயச் சடங்குகள் போல் நான்கு சுவர்களுக்கு மத்தியில் நடத்தி முடிப்பதில் பெருமையில்லை. மக்களைப் பெரும் தொகையில் வரவழைத்து - அப்படி முடியாத இடத்தில் வேறு வழிகளிலாவது (கலை நிகழ்ச்சிகள் போன்றவை வைத்து) அவர்களை அழைத்து அவர்களுக்கு ஈழத்துப் படைப்புகள் குறித்துச்சிறந்தமுறையில் அறிமுகம்செய்தல்வேண்டும். அதனால் வெளியீட்டு விழாக்களின் பயனை எழுத்தாளன் வேகமாகவும் விரைவாகவும் பெறமுடியும்.

## வானொலி

புதன் 30—6—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-00 நாதாஞ்சலி 6-10 சைவநற்சிந்தனை 6-15 இஸ்லாமியநற்சிந்தனை 6-20 பௌத்த நற்சிந்தனை 6-25 பக்திப்பாடல்கள் 7-00மெல்லிசை 7-30படப்பாட்டுக்கள் 8-00 இசைவேளை8-15 இந்துசமயஉரை 8 30 சைவநீதி.

9-00மனநிலையும்குறிக்கோளும்9-30முஸ்லிம் சமயக்கல்வி ஒலிபரப்பு10-00 தொழிலாளர்களுடன் 10-30 படத்திலிருந்து 11-15 சிறுவர் மலர் 12-00 எங்கள் நண்பகல்விருந்தாளி 1-05 பெண்ணுலகம்.

மாலை 4-30 சங்கமம் 5-00 பிறந்தின வாழ்த்துகள் 5-30 கானமஞ்சரி 6-15 குரலிசை 7-00 தாளவாத்தியக்கச்சேரி 7-30 விவேகசிசக்கரம்இல.20 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-45 பாட்டுகள். திலகநாயகம் போல் 10-30 செய்தித்தொகுப்பு.



யாழ். வின்ஸர் வெண்திரையில்
காலை 10-30, 2-00, மாலை 5-30
★ ஜெமினிகணேசன் ★ விஜயகுமாரி
★ நாகேஷ், ★ ரமாபிரபா ★ ராஜ்ஸ்ரீ ★ அசோகன்
நடிக்கும்
மனைவி மக்களோடு பார்த்து மகிழவேண்டிய படம்
மனைவி

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி
காலை10-30பி.ப.2-00 5-45
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா?

வெல்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
கண்ணன்
என் காதலன்

றீகல் — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி .ப. 2-30
சிவாஜி-ஜமுனா-கண்ணாம்பா
நடித்த
மருதநாட்டு
வீரன்
Daily at 6-00 p. m
Burt Lancaster
in
SCALP HUNTERS
(Color)

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் பெருமையுடன் அளிக்கும்
மகோன்னத குடும்பச் சித்திரம்
ராஜா (யாழ்ப்பாணம்)
(தினசரி காலை 10-30, பிற்பகல் 2-00, மாலை 5-30
ஜெய்சங்கர் நாகேஷ் லக்ஷ்மி
(இரு வேடங்களில்)
சுந்தரராஜன் விஜயகுமாரி அஞ்சலிதேவி
நடித்த

மகனே நீ வாழ்க
டைரக்ஷன்:
எம். கிருஷ்ணன் (ரிக்ஷாக்காரன் புகழ்)

ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி.ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை5.30
முத்துராமனசுந்தரராஜன
நாகேஷ் - ராஜஸ்ரீ லக்ஷ்மி,
நடித்த
3வது வாரம்
நவக்கிரகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி மொழிகள்

இவ்வகாலத்திலே இத்தச்சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல்வேண்டும்.

0 0 0

ஈசுரபக்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைவைய்ய பெரும் பாக்கியம்.

0 0 0

தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான். அவ்வற்ப இன்பமோ மிக இழிந்தது.

0 0 0

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றே யாயினும், தீதேயாயினும் அதுவே பெரும்பான்மையும் மரண பரியந்தம் அவனைத் தொடரும்.

0 0 0

நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள், முறையே பெரும்பான்மையும், நமது நற்சார்பு, தீச்சார்புகளால் ஆகும்.

— நாவலர்






### தொழில் நுட்பக்கல்லூரி

# இரண்டாம் வருட பரீட்சை முடிவுகள்

குருநகர், திங்கள்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி தொழிற்பிரிவுக்கான இரண்டாம் வருட இறுதிப்பரீட்சையில் சித்தி பெற்றுள்ளவர்களின் விபரம் வருமாறு:

**மின்கம்பி இணைத்தல்?**

பகல்நேர வகுப்பு எஸ் அமிர்தலிங்கம், என் சிவபாலன், கே சிறீதரன், எஸ் இற்றம்பலம், எஸ் ஞானசேகரம், எஸ் ஜே நிக்கலஸ் எஸ் ஸ்ரீகுமார், மர வேலை. பகல் வகுப்பில் சித்திபெற்றவர்கள்: கே குணசிங்கம், எம் தெய்வேந்திரம், ஆர் நடேசபிள்ளை, கே மரிய தாஸ், ஏ பாசிலாமணி, கே ரவீந்திரன், ரீ லோகநாதன், எஸ் ஸ்ரீகாந்தராசா.

**குழாய் சரிபார்த்தல்:**

பகல்நேரவகுப்பு: ரி கந்தசாமி, எம் குணரத்தினம், ரி சத்தியநாதன், பி ஸ்ரீதேவன், கே செல்வரத்தினம் வி ஞானகுரு, பி முத்துக்குமாரசாமி, எஸ் ரகுபதி, கே ஜெயராசா. உலோக வேலை பகல் வகுப்பில் சித்தி பெற்றவர்கள்: கே கனகரத்தினம், கே கேதீஸ்வரன், ஏ சந்திரசேகரம், வி பாலகிருஷ்ணன், எஸ் வாமதேவன்.

**மின்கம்பி இணைத்தல்:**

மாலை வகுப்பு: கே ஆறுமுகம், எஸ் இராசேந்திரம், எஸ் ஜெயகாந்தா, வி பத்மசீலன், ரி மகேஸ்வரன், ஜே இராசகோன்.

**மோட்டார் பொறியியல்:**

பகல்நேர வகுப்பு: என் கருணைவடிவேல், கே சிவலிங்கம், எஸ் சிவலிங்கம், எஸ் நித்தியானந்தம், எஸ் ஜே நித்தியானந்தம், வி மரியதாஸ், குருதேவன் எஸ் ஜெயரத்தினம், ஏ இராமகிருஷ்ணதாஸ், கே வரதராசா, எஸ் ரஞ்சித் அலெக்சாண்டர்.

—

### இன்று கலைவிழா

யாழ்ப்பாணம், புதன்

கரவத்தை புனித திரேசா தேவாலய வளவில் இன்று கலைவிழா நடைபெறவிருக்கிறது.

ஏழாலை கிராமசபைத்தலைவர் திரு. மு. துரைராஜா இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இவ்விழாவில் ஜோனியஸ் கழகத்தினரின் 'உறங்காத உள்ளம்' என்ற சமூக நாடகம் நடைபெறவிருக்கிறது.

### திருமுறை மகாநாடு இன்றை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டு, சைவசமய அபிவிருத்திக் கழகத்தாரால் நடத்தப் பெற்றுவரும் 'திருமுறை மகாநாடு' இன்று இரண்டாம்நாள் விழாவாகும். இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

இம் மகாநாட்டுக்கு திரு. க. சொக்கலிங்கம் தலைமை வகிப்பார். திருவாட்டி மகேஸ்வரி இராசேந்திரனின் வரவேற்புரையை அடுத்து, பண்டிதர் செ சிவப்பிரகாசம் திரு. சொ. கதிரேசர் பிள்ளை, திரு. க சிவராமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் 'அம்பிகையைச் சரணடைந்தால்' என்னும் பொருள்பற்றி கவியரங்கும் அதையடுத்து சங்கீதபூஷணம் ப. முத்துக்குமாரசாமிசர்மா, சங்கீதபூஷணம் ச. பாலசிங்கம் ஆகியோரின் இன்னிசை விருந்து இடம்பெறும்.

### பதில் மாஜிஸ்திரேட்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்திரேட்டாக இன்று முதல் ஜூலை 4-ந் தேதி வரை புறக்டர் எஸ் கனகரத்தினம் கடமையாற்றுவார்.

ப. நோ. கூ. சங்கங்கள் மூலம்

## கைத்தொழில் பேட்டைகள் நிறுவப்படுமாம்

(நமது குருநகர் நிருபர்)

'நாட்டை அபிவிருத்தி செய்வதில் இன்றைய அரசாங்கம் பல திட்டங்களை வகுத்துச்செயலாற்றி வருகிறது. இத்திட்டங்களில் ஒன்று தான் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்து பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாகும். இத் திட்டத்தின் மூலம் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களை கொண்டு பல கைத்தொழில் பேட்டைகளை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது இதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது குறைக்க முடியுமென அரசாங்கம் நம்புகிறது.'

யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய அமைப்பிலான நிர்வாக அலுவலகத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா திறந்து வைத்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

சமாசத் தலைவர் திரு. ஏ' ரி. துரையப்பா தலைமையில் இத் திறப்பு விழா வைபவம் நடைபெற்றது.

திரு. துரையப்பா பேசுகையில், சகல பாவனையாளர்களுக்கும் சகலபொருட்களும் கிடைக்கக் கூடியதாக டிப்போ முகாமையாளர்கள் பணியாற்ற வேண்டுமென்றும், சமாசத்தைத்திறம்பட நடாத்தச் சகலரும் தம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தின் இப்புதிய திட்டத்தால் சங்கங்களிலுள்ள சிலர் பதவியிழக்கக்கூடுமென்றும், பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் வெற்றிடங்கள் வரும் பொழுது இவர்களது தகுதிக் கேற்ப வேலை வழங்கப்படும் என்றும் சொன்னார்.

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், புதன்

இன்று மாலை திரு. பெ. சண்முகநாதனின் 'பெண்ணே நீ பொய்யவள் தான்' என்ற நூல் வெளியீடு யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் பலர் சொற்பொழிவாற்றுவர்.

——

### பாகிஸ்தானில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்திருப்பதாகக் கூறினார் அவர். பாகிஸ்தானுக்கான புதிய அரசியல்சாஸனத்தை ஆக்கும் உரிமையை தேசிய சட்டசபையிடமிருந்து எடுத்துக் கொண்டதாகவும் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் சிவில்நிர்வாகம் அமைக்கப்பட்டாலும்கூட, இராணுவச்சட்டம் அமுலில் இருக்குமென்றும் கூறினார்.

அரசியல் நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும் என்று திரு' பூட்டோ கோரியிருக்கிறார். அதிபர் யாஹியா கானின் வானொலிப் பேச்சுப்பற்றி கருத்து தெரிவிக்க பூட்டோ மறுத்துவிட்டார்.

# பிள்ளையார் தான்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திகைத்துப்போனேன். அங்கு ஒரு மறைவிடத்தில் கண்ணை மூடிக்கொண்டு, 'கடவுளே! நீதான் கதி. என்னைக் கைவிடப்போகிறீரா?' என்று கண்ணீர் ததும்பக் கேட்டேன் அடுத்தகணம் பார்க்கிறேன். யாரோ அந்த வியாபார அன்பரிடம் ஒரு 'செக்' கொண்டு கொடுத்தார். உயிர் வந்தது பின்னர் அதைப் பெற்றுச் சென்றேன். கடவுள் அன்றி வேறு யார் இப்படி உதவியது? என் கெட்டித்தனமா? அல்லது முன்னேற்பாடா?" என்றார்.

கடவுள்எல்லாருக்கும் ஏன் இப்படி உதவமாட்டேனென்கிறார்? பணக்காரருக்குத்தானா உதவுகிறார்? என்று வாலிப அன்பர்கள் கேட்கலாம். இதற்கும் காரணம் ஏதோ இருக்கவேண்டும். அவரையே கேட்டேன். தமது பெரியோர்கள் வந்தவர்களுக்கெல்லாம் உதவுவதையே விரதமாகக் கொண்டவரென்றும், அந்த தர்மம் தான் தலை காக்கிறதென்றும் சொன்னார். இவரும் 'யாருக்கும் 'இல்லை' என்று சொல்லாமல் தர்மம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. நாம் பிறரிடம் கருணை காட்டினால்தானே கடவுள் நம்மீது கருணைகாட்டுவார்.

கடவுள் 'ஏழை பங்காளன்' என்றும், பணக்காரர் கட்சியைச் சேர்ந்தவரல்ல வென்றும் ஒரு பிரசங்கியார், சோஷலிஸ பிரசாரம் செய்துவந்தார். திருவாசகத்திலும் 'ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய்' என்றுள்ளதல்லவா? அதை எடுத்துக் கூறினார்! திருவாசக உரையை வந்து பார்த்தேன். 'ஏழை என்றால் பெண். பெண்ணைத் தம் பாகத்தில் வைத்திருப்பவர்' என்று அர்த்தம் போட்டிருந்தது.

—'பித்தன்'

பீகார் மாநிலத்தில்

# பலூன் மூலம் சீனத் துண்டுப் பிரசுரங்கள்

புதுடில்லி, ஜூன் 29

பீகார் மாநிலத்தின் பல பகுதிகளில் சீன மொழியில் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் பலூன்கள்மூலம் போடப்பட்டுள்ளன. இவை கோமிண்டாங் இயக்கத்துக்குரியவென்றும், உள்நாட்டில் நக்சல்பாரிகளின் செயல்களை தூண்டுவதற்கு கம்யூனிஸ்ட் சீனாவினால் போடப்பட்டவை அல்ல வென்றும் லோகசபையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் உள்நாட்டமைச்சர் ராம் நிவாஸ் மிர்தா தெரிவித்தார்.

இந்தத்துண்டுப் பிரசுரங்கள் பற்றி லோகசபையில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இவை ஜூன் மாதம் 14-ம் திகதிக்கும் 18-ம் திகதிக்குமிடையில் போடப்பட்டிருப்பதாகவும் இந்த பலூன்களில்பிரச்சார துண்டுப் பிரசுரங்களும், ட்ரான்சிஸ்டர்கள், தைக்கப்பட்ட உடைகள், தங்கப் பொத்தான்கள், அமெரிக்காவில் செய்யப்பட்ட பற்றறிகள், கோமிங்டாங் சீனாவின் தேசியக் கொடிகளும் இருந்தனவாம்.

'சியாங்கை ஷேக்கிற்கு விஸ்வாசமாக இருந்து மாசேதுங்கை எதிருங்கள். தைவானின் மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். மாசேதுங்கினால் ஆட்சி செய்யப்படும் சீன மக்களின் தாயகத்தை மீட்பதில் அவர்கள் ஒற்றுமைப்பட்டுள்ளனர்' என்று அப்பிரச்சாரத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

இந்த பலூன்களை கோமிங்டாங் சீனா, மக்கள் சீனக் குடியரசுக்கு அனுப்பியிருக்கலாமென்றும், காற்றின் திசைமாற்றத்தால் பீகார் மாநிலத்தில் வீழ்ந்திருக்கலாமென்றும் கருதப்படுகிறது

### வாடகைக்கு

வீடு:

நவீன வசதிகளுடன்கூடிய வீடு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: 193, நாவலர் வீதி (கஸ்தூரியார் வீதி நாவலர் சந்திக்கருகாமையில்) யாழ்ப்பாணம். 3235

### விற்பனைக்கு

'கென்வூட் செவ்' (KENWOOD CHEF and Attachment) புத்தம் புதிய நிலையில் 92, கோவில் வீதி (Temple Road) [illegible] பார்வையிடலாம். 3219

YOUNG HEARTS
SPORTS CLUB
TOMBOLA GAMES
Commencing
3—7—71
1ST GAME AT
4-30 P. M.
FINAL GAME AT
8-30 P. M.
A SNOW BALL GAME
For Rs 100/-
Will be Chosen by
LOTTERY
DRAW AT 6 P. M.
PALMYRA COTTAGE
85, Main Street,
Jaffna

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org